பக்கங்கள்: எட்டு

Registered as a Newspaper

இம்போட்டற்
நைலெக்ஸ்சாறிவகைகள்
இந்தியன்
பட்டுப் புடைவைகள்
கண்கவர் பிளவுஸ் பீஸ்
வகைகள்
கிறவுண்ஸ்
22, நவீன சந்தை,
யாழ்ப்பாணம்.

உதயன்

விலை
ரூ 2. 50

தரமான சேட்டிங்
✶ சூட்டிங்
கண்கவர் ரெடிமேட்
ஆடைகள்
சின்னஞ்சிறார்களின்
சிற்றுடைகளுக்கு
கிறவுண்ஸ்
22, நவீன சந்தை,
யாழ்ப்பாணம்.

கூர்: 4 விபவ ஞு மார்கழி மீ 24 உ ஞாயிற்றுக்கிழமை ஹிஜ்ரி 1409 ஐ அவ்வல் பிறை 28 (08-01-1989) UTHAYAN -A LIVELY TAMIL DAILY கதிர்: 39

ஜனநாயக நடைமுறையில் சேரக் கோரும்

பிரேமாவின் அழைப்புக் குறித்து ஜே. வி. பி. தீவிரமாக ஆராய்வு

சமரச வாய்ப்புக் குறைவு என அரசியல் வட்டாரங்கள் தகவல்

"முச்சந்தி" மூரளி

சரக்கு ரயில்கள் வருகுது! ஆனால் ஏறின விலைகள் இறங்க மறுக்குது!

கொழும்பு. ஜனவரி 08

ஜனநாயக நடைமுறையில் சேர்ந்துகொள்ளுமாறு ஜனதிபதி திரு. ஆர் பிரேமதாஸ ஜே. வி. பி.க்கு விடுத்த அழைப்புக் குறித்து ஜே வி. பி.யின் முக்கிய பிரமுகர்கள் தீவிரமாக ஆராய்ந்து வருகின்றனர் என்று கொழும்புச் செய்திகள் தெரிவிக்கின்றன.

கொழும்பு பொரளைச் சந்தியில் நடைபெற்ற ஜ. தே. க. கூட்டத்தில் பேசும்போது ஜனதிபதி பிரேமதாஸ இந்த அழைப்பை விடுத்திருந்தார்.

வடக்கு-கிழக்குப் பகுதிகளில் தொடர்ந்து போராட்டம் நடத்தி வரும் தமிழீழ விடுதலைப் புலிகளுக்கும் அவர் இந்த வேண்டுகோளை விடுத்தார்.

ஜனதிபதியின் கோரிக்கை குறித்து ஜே வி பி.யின் உயர் மட்டப் பிரமுகர்கள் தீவிரமாக ஆலோசனைசெய்து வருவதாக கொழும்புச் செய்திகள் நேற்றுத் தெரிவித்தன.

பெரும் அளவு வன்செயல்களைக் கட்டவிழ்த்து விட்டபோதிலும் ஜனதிபதித் தேர்தல் முடிவுகள் ஜே. வி. பிக்குப் பாதகமாக அமைந்தபடியால் ஜே. வி பி சமரசம் ஒன்றுக்கு வருவது குறித்து பரிசீலனை செய்யப்படவேண்டும் என்று ஜே. வி. பியில் உள்ள மிதவாதிகள் கருதுகின்றனர் என்று தெரிகிறது.

ஆனால் தீவிர போக்குடையோர் ஜே. வி. பி. தனது தனித்துவத்தை இழக்கக்கூடாது என்று வலியுறுத்தி வருகின்றனர்.

ஜே. வி பி க்குள் தீவிரவாதிகளின் கையே ஓங்கி இருப்பதாக கொழும்புச் செய்திகள் தெரிவிக்கின்றன. (இ-ஐ

ரூபா 10 கோடி நஷ்டம்

இலங்கை சிமெந்து கூட்டுத்தாபனத்துக்கு கடந்த மூன்று மாதங்களில் 10 கோடி ரூபா அளவில் நஷ்டம் ஏற்பட்டுள்ளதாக அறிவிக்கப்படுகிறது.

கூட்டுத்தாபனத்தின் புதிய தலைவர் கே. வி. எச். பிரேமசந்திரா இத்தகவலை வெளியிட்டார்.

காங்கேசன்துறை, காலி, புத்தளம் ஆகிய இடங்களில் உள்ள தொழிற்சாலைகள் மின்சார விநியோகத் தடை காரணமாக இயங்காததினால் இந்த நஷ்டம் ஏற்பட்டிருப்பதாகஅவர் மேலும் சொன்னார்.

கடந்த ஆண்டு சிமெந்து கூட்டுத்தாபனம் 19 கோடி 80 லட்சம் ரூபா லாபம் அடையத் திட்டமிட்டிருந்தது.

பதற்ற நிலை, மின் விநியோகத்தடை ஆகியன காரணமாக எதிர்பார்க்கப்பட்ட லாபம் 10 கோடி ரூபாவினால் குறையக்கூடிய நிலை ஏற்பட்டுள்ளது!

இப்படி திரு. பிரேமச்சந்திரா சொன்னார்.

45 தினங்கள் கழித்து அடக்கம்

டோக்கியோ, ஜன 8

காலமான ஜப்பான் சக்கரவர்த்தி ஹிரோஹிட்டோவின் பூதவுடல் அடக்கம் வருகிற மாதம் 24 ஆம் திகதி நடைபெறும் என்று அறிவிக்கப்பட்டது.

ஜப்பானிய முடியாட்சி வழக்கப்படி, சக்கரவர்த்தி இறந்து 45 தினங்கள் கழிந்த பின்னரே பூதவுடல் அடக்கம் செய்யப்பட வேண்டும்.

அதன்படியே இத்திகதி நிர்ணயிக்கப்பட்டது. (இ-எ)

மற்றொரு முகாம்

நெல்லியடி - பருத்தித்துறை வீதியில் நெல்லியடி இன்ட ஸ்ரீஸுக்கு அண்மையில் இந்திய அமைதிகாக்கும் படையினர் புதிதாக முகாம் ஒன்றை அமைத்துள்ளனர்.

இம்முகாம் தோட்ட வெளிசலுக்கு நடுவில் அமைந்துள்ளது.

சங்கீதம்—நடனம்: தோற்றமுடியாது போனோருக்கு விசேஷ செயல்முறைப் பரீட்சை

யாழ்ப்பாணம். ஜன 8

கடந்த ஜூலை மாதம் நடைபெற்ற விசேட ஜீ. சீ. ஈ சாதாரணதரப் பரீட்சையில் சங்கீதம், நடனம் ஆகிய பாடங்களுக்கான செயல் முறைப் பரீட்சைக்குத் தோற்றமுடியாதவர்களுக்கு விசேட செயல் முறைப் பரீட்சை நடத்தப்படவுள்ளது.

யாழ் பிராந்தியக் கல்விப் பணிப்பாளர் திரு. வெற்றிவேலு சபாநாயகம் இது பற்றிப் பரீட்சைத் திணைக்கள ஆணையாளருடன் தொடர்பு கொண்டு பேசியுள் (8-ஆம் பக்கம் பார்க்க)

யாழ். தேர்தல் மாவட்டத்தில் வாக்களிப்பு நிலையங்கள் அதிகரிக்கப்படலாம்

நடைபெறவிருக்கும் பொதுத் தேர்தலில் யாழ். தேர்தல் மாவட்டத்தில் வாக்களிப்பு நிலையங்களின் எண்ணிக்கை அதிகரிக்கப்பட வேண்டும் என்று செயலக அதிகாரிகள் தீர்மானித்துள்ளார்கள்.

நேற்றுக்காலை யாழ் செயலகத்தில் தேர்தல் போட்டியிடும் அபேட்சகர்களின் பிரதிநிதிகளுடன் கலந்துகொண்ட கூட்டத்திலும் இது பற்றிக் தெரிவிக்கப்பட்டது. (5)

பயணிகள் ரயிலுடன் 2 சரக்கு ரயில்கள் நேற்று யாழ் வந்தன

யாழ்ப்பாணம், ஜன 8

தொளாயிரம் பயணிகளுடன் யாழ் தேவி நேற்று யாழ்ப்பாணம் வந்து சேர்ந்தது.

நேற்றுக்காலை 5. 45க்கு கொழும்பு கோட்டை ரயில் நிலையத்தில் இருந்து புறப்பட்டரயில் அனுராதபுரத்தில் ஒரு மணி நேரம் தாமதித்தே யாழ்ப்பாணம் வந்து சேர்ந்தது.

வழமைபோல் இன்று காலை 9 மணிக்கு யாழ் தேவி புறப்படும் எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை இரண்டு சரக்கு ரயில்களும்நேற்று யாழ்ப்பாணம் வந்து சேர்ந்தன.

எரிபொருள், அரிசி, சீனி என்பனவும் சரக்கு ரயில்களில் எடுத்து வரப்பட்டன. (இ-10)

ரயில் கட்டணத்தை சில்லறைப் பணமாக கொண்டுவருமாறு ஆலோசனை

யாழ்ப்பாணம் ஜன 8

ரயில் பயணிகள் டிக்கெட் பெறவரும்போது அதற்கு அளவாகப் பணத்தை சில்லறையாகக் கொண்டு வரும்படி கேட்கப்படுகின்றனர்.

யாழ் ரயில் நிலைய கருமபீடத்தில் ஏற்படும் தாமதத்தை இதன் மூலம் நிவர்த்தி செய்யலாம் என்று ரயில் நிலைய பிரதம அதிபர் தெரிவித்துள்ளார்.

இதன்படி யாழ். கொழும்பு கட்டணமாக 3 ஆம் வகுப்பு ஆசனத்திற்கு 51.50 சதமும், இரண்டாம் வகுப்பு ஆசனத்துக்கு 146.60 சதமும் மாற்றிக் கொண்டு வரும்படி ரயில் பயணிகளுக்கு வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது. (இ-10)

சுபநேரம்

8 - 1 - 1989
மார்கழி 24
ஞாயிற்றுக்கிழமை

சுபநேரம்:
9.32 முதல் 11.02 வரை

ராகுகாலம்:
5.02 முதல் 6.32 வரை

இவை பாலுக்கும் இரவுக்கும் பொருந்தும்

ஓமானில் உள்ள வெளிநாட்டவர் பெற்றோரையும் அழைக்க வசதி

மஸ்கட், ஜனவரி 08

ஓமானில் பணிபுரியும், வெளிநாட்டவர்கள் தங்களுடன் பெற்றோர்களை அழைத்து வைத்திருக்க கூடியதாக குடியகல்வு, குடிவரவுச் சட்டத்தை ஓமான் அரசு தளர்த்தியுள்ளது-

மாதம் 200 றியால் சம்பளம் பெற்றுக்கொண்டு ஒருவருட சேவையைப் பூர்த்தி செய்தவர்கள் மட்டுமே இச்சலுகையை அனுபவிக்க முடியும்.

இச்சலுகையைப்பெற விண்ணப்பிப்பவர்களுக்கு நிறுவனம் வீட்டுவசதி வழங்கியிருக்கவேண்டும்; வீட்டுவசதி வழங்கப்படாவிடில் மாதம் 300 றியால் சம்பளம்பெற வேண்டும்.

முன்னர் வேலை செய்பவர்களின் பெற்றோர் மூன்று மாதங்கள் மட்டும் வந்து தங்கிச்செல்ல அனுமதிக்கப்பட்டது. அதுவும் சிலவிசேஷ நிபந்தனையின் பேரில்தான் அனுமதிக்கப்பட்டது.

ஓமான் அரசின் இச்சலுகை அங்கு வேலை செய்யும் இலங்கையருக்குத் திருப்தியை அளித்துள்ளது.

மனைவிமாரும் வேலை செய்யலாம். பெற்றோர் வீட்டில் தங்கி குழந்தைகளைப் பராமரிக்கலாம் என்று அவர்கள் கருதுகின்றனர். (இ எ)

கிழக்கு முஸ்லிம்களைப் பாதுகாக்க 3,750பேர் கொண்ட முஸ்லிம் ஊர்காவற்படை

அஷ்ரப் கோருகிறார்

அம்பாறை, ஜன 8

நாம் மாகாண சபை உறுப்பினர்களாகச் சத்தியப் பிரமாணம் செய்து கொள்வதற்கு முன்னர் எமது முஸ்லிம் கிராமங்களின் பாதுகாப்பு உறுதிப்படுத்தப்படவேண்டும். இதற்காக 3,750 முஸ்லிம் ஊர்காவல் படை வீரர்கள் நியமனம் செய்யப்படவேண்டும் என்று இந்தியாவிடம் வலியுறுத்தி உள்ளோம். இந்தியாவுடன் இது தொடர்பாக நாம் நடத்திவரும் பேச்சுவார்த்தைகள் சுமுகமாக முடிவுற்று எமது கிராமங்களின் பாதுகாப்பு உறுதி செய்யப்பட்டதும் மாகாண சபைகளுக்குச் செல்வோம்.

ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் சட்டத்தரணி ஜனாப் எம். எச் எம். அஷ்ரப் மேற்கண்டவாறு கூறினார்.

ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் பொதுக் கூட்டம் ஒன்று, நிந்தவூர் மாதோட்டம் பகுதியில் நடைபெற்றது.

இந்தக் கூட்டத்தில் உரையாற்றும்போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

நிந்தவூர் மத்திய குழுத் தலைவர் அல்ஹாஜ் எம். ரீ ஹஸனலி (8-ஆம் பக்கம் பார்க்க)

★யாழ் ★மட்டக்களப்பு ★சீனன்வாடி ★வவுனியா ராணுவ விமான நிலையங்களில்

சிவில் விமானங்கள் இறங்க அனுமதி

கொழும்பு, ஜன 8

யாழ்ப்பாணம், சீனன்வாடி, மட்டக்களப்பு, வவுனியா ஆகிய இடங்களில் உள்ள இராணுவ விமானத் தளங்களில் சிவில் விமானங்கள் இனி இறங்க முடியும்.

விமான நிலைய, விமானப் போக்குவரத்து வட்டாரங்கள் இத்தகவலை வெளியிட்டன.

இலங்கை விமானப் படையின் அனுமதியின்றி இந்த விமானத் தளங்களை தனியாருக்கு சொந்தமான விமானங்கள் பாவிக்க இது காலவரை தடைவிதிக்கப்பட்டிருந்தது.

தனியார் விமானங்களுக்குத் தேவையான எரிபொருளை இலங்கை விமானப்படைஇலங்கை பெற்றோலியம் கூட்டுத் தாபனத்துடன் இணைந்து வழங்கும் என்றும் அவ்வட்டாரங்கள் தெரிவித்தன.

விமான நிலைய, விமானப் போக்குவரத்து சேவைகள் நிறுவன அதிபர் ஜெனரல் சிறில் ரணதுங்காவின் பொறுப்பைத் தொடர்ந்தே இந்த அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

உள்ளூர் விமானப் போக்குவரத்து நடத்தும் நான்கு தனியார் நிறுவனங்கள் தற்சமயம் நாட்டில் உள்ளன.

(இ-எ)

செய்திச் சாரம்

கைதான 6 பேரில் இருவர் பிக்கு உடையில்

கொழும்பு, ஜன. 8

ஆறுபேர் கொண்ட கோஷ்டி ஒன்றை பிங்கிரியா பொலீஸார் வழிமறித்துக் கைது செய்தனர்.

அவர்களிடமிருந்து பெருந் தொகையான பணம், ஆயுதங்கள் மற்றும் வெடி மருந்துகள் கைப்பற்றப்பட்டன.

அந்த ஆறுபேரில் இருவர் பௌத்த பிக்கு உடை அணிந்து இருந்தனராம்.

கடந்த செவ்வாய் இரவு இச்சம்பவம் இடம் பெற்றது. (இ-எ)

கிராம சேவையாளர் சுடப்பட்டார்

கொழும்பு ஜன 8

மாத்தறையில் யட்டியான கிராமசேவையாளர் கே ஜி தனபால தனது வீட்டின் வாசல்படியில் நின்றுகொண்டிருந்தபோது இனந்தெரியாத நபர் ஒருவரினால் சுட்டுக்கொல்லப்பட்டார்.

கடந்த புதன்கிழமை இச்சம்பவம் இடம்பெற்றது. (இ-எ)

நெல்லியடியில்

சரவெடி, ஜன.8

நெல்லியடி வர்த்தக நிலையங்கள் ஞாயிற்றுக்கிழமைகளிலேயே மூடப்படும்.

நெல்லியடியில் இதனை கட்டாயமாக்கி முறைப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

[illegible] வரை காலமும் வெள்ளிக் கிழமையே நெல்லியடி வர்த்தக நிறுவனங்களின் விடுமுறை தினமாக இருந்துவந்தது (இ-70)

மூதாட்டி கொலை

கொடிகாமம், ஜன 8

கொடிகாமம் பருத்தித்துறை வீதியில் வசிக்கும் பொன்னையா மகேஸ்வரி என்னும் 75 வயதுடைய வயோதிபப் பெண் அவரது வீட்டுக்குச் சமீபமாக உள்ள கிடங்கொன்றில் கொலை செய்யப்பட்ட நிலையில் காணப்பட்டார்.

இவர் தனிமையாக வசித்துவந்த வீட்டுக் கதவு உடைக்கப்பட்டு இவர் சேமித்துவைத்திருந்த பணம்முழுவதும் திருடப்பட்டுள்ளது. (ச-75)

வவுனியாவில் 5 முனைப் போட்டி

வவுனியாவில் ஐ. தே. க., முஸ்லிம் காங்கிரஸ், தமிழர் விடுதலைக் கூட்டணி சேர்ந்த கூட்டமைப்பு, ஈழவர் ஜனநாயக முன்னணியின் கயேச்சைக் குழுவினர், சிறிலங்கா சுதந்திரக் கட்சி ஆகிய ஐந்து கட்சிகள் போட்டியிடுகின்றன. (இ-164)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சின்னஞ் சிறு விளம்பரம்

விற்பனைக்கு

புதிய இந்கியன் பாக்கியலட்சுமி வெற்றிறெண்டர் 1½ லீற்றர் விற்பனைக்கு உண்டு விலை குறித்து கடிதமூலம் தொடர்பு கொள்ளவும் M.G இவிரான்லி, முல்லைத்தீவு. (8793)

நல்ல நிலைமையிலுள்ள Honda C B 250 மோட்டார் சைக்கிள் விற்பனைக்கு உண்டு. தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி:B. ராஜா, 134, 4ஆம் குறுக்குத் தெரு, (O L R சேர்க்கைக்கு முன்) யாழ்ப்பாணம். (8609)

யாழ் பிரபல புத்தக சாலைகளில் O/L வர்த்தக மாணவர்களுக்கும், A/L கணக்கியல் முதலாம் ஆண்டு மாணவர்களுக்கும் உகந்த கணக்கியல் வழிகாட்டி ஆக்கம்: A. துரை. (8785)

பாவித்த அலுமாரி, கட்டில் மெத்தைகள், குளிர்சாதனப் பெட்டி, பெரிய கண்ணாடிமேசை, சாப்பாட்டு மேசை, Show-case, Oven, Kettle Glassware மற்றும் பல உடன்மலிவு விலையில் விற்பனைக்குண்டு. 164, ரெம்பிள்ரோட். நல்லூர் கோயில் பின் வீதி. (Dr. அழகர்கோன் டிஸ்பன்சரி முன்பாக.) (8615)

உடன் விற்பனைக்கு

Isuzu ஜேனி மிலிபன் L உடன் விற்பனைக்கு உண்டு. 87 ஆம் ஆண்டு வரை Tax இன்சுரன்ஸுடன் விலை 2, 25,000/- தொடர்பு கொள்ளவும்: N விஸ்வநாதன் 27, ஸ்ரான்லி, வீதி, [யாழ்ப்பாணம்: [8614]

இறைச்சிக் கோழிகள்

புறொயிலேஸ், கல்பேட்ஸ், இறைச்சிக் கோழிகள் புது வருடத்தை முன்னிட்டு விலை குறைத்து விற்பனை செய்கின்றோம். தொடர்பு:- சோட்டி, ஸ்பாம்ஸ்ரேசன் ரோட், மயிலங்காடு சுன்னாகம் (8765)

Broiler இறைச்சிக் கோழிகள், பேட்டுக் கோழிகள், சேவற் கோழிகள், சூப் குஞ்சுகள், விருத்துக் குஞ்சுகள் என்பன குறைந்த விலையில் எப்பொழுதும் பெற்றுக் கொள்ளலாம். சுகாதார முறைப்படி சுத்தம் செய்து கொடுக்கப்படும். Nallur Farm Centre, C/o நல்லூர் வீடியோ சென்ரர், 19, முருகேசர் ஒழுங்கை, நல்லூர். (8547)

கோழிக்குஞ்சு விநியோகம்

Nallur Farm Centre Prima Lohman வெள்ளை, சிவப்புப் பேட்டுக் குஞ்சுகள், சிவப்பு சேவற் குஞ்சுகள், Golden Comet சிவப்பு பேட்டுக் குஞ்சுகள், Hyline கறுப்பு, வெள்ளை Silver பேட்டுக் குஞ்சுகள், ஒவ்வொரு புதன்கிழமைகளிலும் விநியோகிக்கப்படும். 25 குஞ்சுகளுக்கு மேல் கொள்வனவு செய்வோருக்கு படிப்படியாக விலையில் சலுகை உண்டு. C/o நல்லூர் வீடியோ சென்ரர், 19, முருகேசர் ஒழுங்கை, நல்லூர். (8546)

புறொயிலர் குஞ்சுகள், பேட்டுக் குஞ்சுகள், சேவற் குஞ்சுகள் ஒவ்வொரு வாரமும் விநியோகிக்கப்படும். பதிவு செய்க. சற்குணராஜா அன் பிறதர்ஸ் பிரம்படி லேன், கொக்குவில். (8755)

தேவை

எமது தொழிற்சாலையில் வேலை செய்வதற்கு பெண்பிள்ளைகள்தேவை. சான்றுப்பத்திரங்களுடன் வரவும். எஸ். சுப்பிரமணியம்& கொம்பனி 34 ஆடிய பாதம் வீதி, (நல்லூர் மாக்கற் அருகாமையில்) நல்லூர். யாழ்ப்பாணம், C/1205

இந்து வேளாள U.K. இரு பொறியியலாளர் 30 வயது 8ல் செவ்வாய் ரேவதி நட்சத்திரம், 28 வயது செவ்வாயற்ற ரேவதி இருவருக்கும் U K. யில் பட்டதாரிப் பெண் தேவை. தொடர்பு ABCDE விவாகப் பொருத்தனர் 328, நாவலர் ரோட், ஆனைப்பந்தி. (8794)

தாதிபயிலுனர்கள் தேவை

G C E. O/L ஆங்கில சித்தியும் A/L இரண்டு பாடங்களும் விரும்பத்தக்கது. 5மைல் சுற்றுவலில் இருப்போருக்கு முன்னுரிமை. மகப்பேறும் பிணிதீர் மனையும் சங்கானை. (8761)

வெயிட்டர் வேலைக்கு நன்கு அனுபவம் உள்ள ஆட்கள் தேவை. யாழ் நகரில் கடைகளில் வேலை செய்தவர்களுக்கு முதல் இடம் கொடுக்கப்படும். தொடர்பு:- றிக்கோ ஹோட்டல், 370, அஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் 8786

யாழ் நகரில் இயங்கி வரும் ஆடைகளை தயாரிக்கும் தொழிற்சாலைக்கு பயிலுனர், உதவியாளர்கள் தேவை. [பெண்கள் மட்டும்] 25 வயதிற்குட்பட்டவராக இருத்தல் வேண்டும் தொடர்பு: 418 C/O உதயன். (8777)

முன்றுகன்தேவை

யாழ். வேளாளகுலமும் O/L தரமும் அழகும் குணமும் தையற் பயிற்சியும் உடைய 32 வயது மகளுக்கு அதே குலத்தில் சைவ உணவே உண்ணும் குடிப்பழக்கமற்ற ஆசிரியர், விதிதர் அல்லது போதிய வருவாயுடைய வரனைக்தேடுகின்றனர், சாதக குறிப்பு விபரங்களுடன் 19. C/o உதயனுக்குத் தொடர்பு கொள்க. (8570)

WANTED

Audit/Accounts trainees those who have passed the G.C E A/L with Accounts as a subject could apply. Apply immediately to- office Manager, Accoun ting system and services (Jaffna) Ltd 145, main street Jaffna. (8795)

தவறிவிட்டது

பரம்பத்து மூசா- இந்திராணி இல: 546260763 V எனது அடையாள அட்டை செல்லிப்பளையில் தவறி விட்டது. கண்டெடுத்தவர்கள் தயவு செய்து சிவராசா – மரியராணி C/o D. இந்திராணி, பருத்தித்துறை வீதி, மயிலிட்டி என்னும் விலாசத்திற்குதொடர்பு கொள்ளவும் (8796)

சிவப்பிரகாசம் இரத்தினதேவன் ஆகிய எனது அடையாள அட்டை இல: 660411488 V யும், பல்கலைக்கழக அடையாள அட்டையும் தவறி விட்டன. கண்டெடுத்தவர்கள் தயவு செய்து உதயன் காரியாலயத்தில் ஒப்படைக்கவும். (8798)

விருப்பங்கள்

ஆண்டு 4 தொடக்க O/L (புதிய)வரையுள்ள வகுப்புகளுக்கானபாடங்களும், ஆண்டு 5 புலமைப் பரிசில் பரீட்சை வகுப்புக்களும் ஆரம்பமாகிவிட்டன. விபரங்களுக்கு எனேற் இன்ஸ்ரிரியூட் வண்ணார்பண்ணை தயாலகம் முன்பாக 99, மானிப்பாய் வீதி, யாழ்ப்பாணம். (8787)

A/L இரசாயன நூல்

வெளிவந்து விட்டது ஆசிரியர் சத்தீஸ் பௌதீக இரசாயனம் பகுதிII நேரில் பெறுவோர்க்கு விஷேட கழிவு தரப்படும். (8767)

AL 89 இரசாயனம்

108 Brown Road, ஆசிரியர் சத்தீஸ். மீட்டல் வினா-விடை வகுப்புக்கள் ஆரம்பம் 9-1-89 திங்கள் 7.30 a.m (திங், செவ், புதன், வியா, வெள்ளி 7.30—8.15 a.m (8773)

இன்று ஆட்சிக்குழுக் கூட்டம்

யாழ் மாவட்ட சனசமூக நிலையங்களின் ஒன்றியத்தின் ஆட்சிக்குழுக் கூட்டம் இன்று காலை 9.30 மணிக்கு இலக்கம் 37, மணிக்கூட்டு வீதியிலுள்ள ஒன்றியப் பணிமனையில் நடைபெற உள்ளது. [ச]

NEW MASTER INSTITUTE

B. M. C. Lane, Jaffna.

89 A/L DAY CLASSES

(திங்கள் —> வெள்ளி)

பிரிவு III

ஆரம்பம்:- 10 - 01 - 89

செவ்வாய்க்கிழமை காலை 7.30 மணி

physics	—	திரு. நந்தகுமார்
Chemistry	—	திரு. மக்ஸி
Botany	—	திரு. செல்வநேசன்
Zoology	—	திரு. நாகநாதன்
Pure & Applied Maths	—	திரு. சந்திரமோகன்

✶ Day Classes பிரிவு I, பிரிவு II க்கு உரிய வகுப்புக்கள் நடைபெறுகின்றன

✶ ஒவ்வொரு மாதமும் 160 மணித்தியாலங்களுக்குக் குறையாத வகுப்புக்கள் நடைபெறும்

(C-1239)

33ம் நாள் நினைவஞ்சலியும் வீட்டுக்கிருத்திகை அழைப்பும்

திருமதி முருகேசு சிவயோகம்

(காலஞ் சென்ற முன்னாள் நீர்கொழும்பு வர்த்தகர் மருதையினர் முருகேசு அவர்களின் மனைவி)

உதயம்: 1934-05-12 அஸ்தமனம். 1988 12-07

அன்பையும், பண்பையும், பாசமதில் கலந்து கண்மணியை இமை காப்பதுபோல் இதுவரை காத்து வந்த... எனதருமைத் தாயாரே! எங்கள் குலவிளக்கே!! நீங்கள் இறைபதமடைந்துமாதமொன்று ஆனதம்மா! உங்கள் நினைவு எம்மை வாட்டுதம்மா! அம்மா உங்கள் நினைவாகவே நாம் வாழ்கிறோம்.

7/12/88 ஆம் திகதி அன்னாரது இறுதிக் கிரியைகளில் கலந்துகொண்டு இறுதி அஞ்சலி செத்தியவர்களுக்கும், பலவழிகளிலும் உதவி வழங்கிய உற்றார், உறவினர்கள், நண்பர்களுக்கும் அனுதாபச் செய்திகள் அனுப்பியவர்களுக்கும் எமது உளமார்ந்த நன்றியறிதலைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

8/1/1989 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை எமது இல்லத்தில் நடைபெறும் சபிண்டீகரண கிரியைகளிலும் கலந்து கொள்ளுமாறு உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரையும் அன்பாய் வேண்டுகின்றோம்.

மகள், மருமகன், பேரப்பிள்ளைகள், உறவினர்கள்.

வேலணை மேற்கு, வேலணை -8

(8 826)

வழங்குநர்களைப் பதிவுசெய்தல் 1989

வலிகாமம் வடக்கு பிரதேச சபை காங்கேசன்துறை

வழங்குநர்களைப் பதிவு செய்யும் முடிவுத் திகதி 15 - 01 - 1989 வரை நீடிக்கப்பட்டுள்ளது என்பது இத்தால் அறிவிக்கப்படுகிறது:

விசேட ஆணையாளர், வலிகாமம் வடக்கு பிரதேசசபை, காங்கேசன்துறை.

(C/1250)

விக்னு டியூசன் சென்ரர்

52, ஸ்ரான்லி ரோட், யாழ்ப்பாணம்,

(கலை, வர்த்தக வகுப்புகளுக்கு தனித்துவம் வாய்ந்த ஒரே நிறுவனம்)

A/L கலை, வர்த்தக மீட்டல்

DAY CLASSES

ஆரம்பம்: 9 - 1 - 1989

(காலை 8-00)

SAT & SUN CLASSES

ஆரம்பம்: 15-1-1989

(காலை 8-00)

எமது தனித்துவம் வாய்ந்த ஆசிரியர் குழு

பொருளியல்	—	திரு கலாசரன்
வர்த்தகம்	—	திரு லங்கா
கணக்கியல்	—	திரு வன்னியசிங்கம்
அளவையியல்	—	திரு சுப்பிரமணியம்
இந்துநாகரிகம்	—	திரு காரை சுந்தரம்பிள்ளை
தமிழ்	—	திரு குழந்தை
புவியியல்	—	திரு குணராஜா
அரசியல்	—	திரு மனோர

90 ஆண்டுக்கான புதிய பிரிவுகள் ஆரம்பமாக உள்ளன.

(C/1078)

JAFFNA COLLEGE

Institute of Technology
Vaddukoddai

VACANCY

Applications are invited from suitable qualified Condidates for the following post.

INSTRUCTOR
(Computer Dept)

Qualification:-

Applicants shoud have either

(i) Diploma in System Analysis and programming from N I B M together with minimum 1 year, experience in the relevant field.

or

(ii) J C I T - Diploma in Data processing & Computer program with 1st or 2nd Class and minimum 1 year experience in the relevant field

or

(iii) Only other equivalent Qualification from a Recognised Institution with experience.

Knowled ge in programming D base III + Lotus 1, 2, 3, and Fortran Languages and I B M system operation with MS DOS will be an added Qualification.

Salary:-

Negotiable, depending on Qualification and Experience.

Apply with full Bio-Data to the Director

Jaffna College Institute of Technology
VADDUKODDAI

on or before 15-1-89

(C/1243)

கிராம அபி. சங்கம் பாராட்டு

யாழ்ப்பாணம், ஜன 8 மீளக்குடியமர்தல் நிவாரணத்தை பொது மக்கள் சிரமமின்றிப் பெற்றுக் கொள்வதற்கு உதவியவர்களுக்கு புனித அந்தோனியார் கிராம அபிவிருத்திச் சங்கம் பாராட்டுத் தெரிவித்துள்ளது.

சங்கத்தின் தலைவர் எழுதியுள்ள கடிதத்தில் காங்கேசன்துறை இலங்கை வங்கி முகாமையாளர், வங்கி ஊழியர்கள், தையிட்டி கிராம சேவை அலுவலர் ஆகியோரின் மனிதமான புக்கு ஊறணி மக்கள் சார்பாக நன்றி தெரிவிப்பதாகக் குறிப்பிட்டுள்ளார். (இ-5)

திருக்குடும்ப கன்னியர் மடம்

யாழ்ப்பாணம்

HOLY FAMILY CONVENT JAFFNA

மனையியல் டிப்ளோமா பயிற்சியுடன் தனிப்பட்ட பாடமாக தையல், கேக்ஐசிங், சிகை அலங்காரம் பயில்வதற்கும் வசதி செய்யப்பட்டுள்ளது

Book keeping Accounts, Short-hand& Typing English ஆகிய பாடங்களும் தை மாதம் 9ஆம் திகதி ஆரம்பமாகின்றது வயதெல்லை கணிக்கப்படமாட்டாது

SUPERIOR

(8628)

உடுவில் மகளிர் கல்லூரி

தொடர் கல்வி நிறுவனம்

பயிற்சி நெறிகள்:

1. Short-Hand, Type-Writing, [G: C: E: (O/L) & Pitman's London]
2. National Certificate in English (Sri Lanka & London)
3. I. A. B. (London)
4. A.A.T
5. மனைப்பொருளியல் (Cake - Icing, Hair Style, Dress-Making)
6. Pre-School Teacher Training (1 வருடம்)

✶ மாணவியருக்கு விடுதி வசதி உண்டு.

✶ பயிற்சி முடிவில் சான்றிதழ் வழங்கப்படும்.

Registration - வாரநாட்கள் காலை

பயிற்சி ஆரம்பம்:- 11.01.89

— இயக்குனர்

(C/1116)

கண்ணீர் அஞ்சலி

கந்தையா சந்திரசேகரா

(இளைப்பாறிய நீர்ப்பாசன தொழில் நுட்பவியலாளர்)

தோற்றம்: 10 - 07 1932 மறைவு: 07 - 01 - 89

யாழ்ப்பாணத்தைப் பிறப்பிடமாகக் கொண்ட வரும் வவுனிக்குளம் நீர்பாசன இலாகாவில் கடமையாற்றிய இளைப்பாறிய தொழில் நுட்பவியலாளர் கந்தையா சந்திரசேகரா 04-01-89இல் வவுனிக்குளத்தில் காலமானார். அன்னாரின் நமைக்கிரியைகள் 06 - 01 - 89 வெள்ளிக்கிழமை பி: ப: 2, 00 மணிக்கு மார்குளத்தில் நடைபெற்றது, இவ்அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம், அவருக்கு எமது கண்ணீர் அஞ்சலிகள்.

வவுனிக்குளம், நீர்ப்பாசன உத்தியோகத்தர்கள். (8827)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காணவில்லை

சுலட்டி வண்ணார்பண்ணை ஸ்ரீ கற்பக விநாயகர் கோயிலின் பஞ்சமணி ஒரு மாதத்திற்கு முன் களவாடப்பட்டுவிட்டது. அதில் கொடுத்தவர்கள் பெயர் பொறிக்கப்பட்டுள்ளது. இதனைப்பற்றிய தகவல் அறிந்தவர்கள் அல்லது இதனைத் தேடி எடுத்துத் தருபவர்கள், கோயில் நிர்வாகியிடமோ அல்லது உதயன் காரியாலயத்திலோ அறியத் தரவும் தகுந்த சன்மானம் வழங்கப்படும்.

[8783]

NEW MASTER INSTITUTE

241, Navalar Road, Jaffna. B. M. C. Lane, Jaffna.

89 A/L PAPER CLASSES

பிரிவு - I (Saturday & Sunday)

ஆரம்பம்:- 15-01-1989

Sunday 8.30 a.m

8.30 - 9.30 — Chemistry — திரு தில்லைநாதன்

9.30 - 10.30 — Physics — திரு வர்ணம்

10.30 - 11.30 — Zoology — திரு. நாகநாதன்

11.30 - 12.30 — Botany — திரு. குகாதரன்

(C-1224)

சிவாகி இன்ஸ்ரிரியூட்

சிவன் வீதி, சாவகச்சேரி.

A/L 89 கலை, வர்த்தகம்

DAY CLASSES

ஆரம்பம்: 09-01-1989

எமது தனித்துவமான ஆசிரியர் குழு:

பொருளியல்	:-	க. சலாகரன்
கணக்கியல்	:-	S. K. பிரபாகரன்
வர்த்தகம்	:-	இரட்ணம்
இந்துநாகரிகம்	:-	ஜோதீஸ்வரன்
அளவையியல்	:-	கேசவன்
தமிழ்	:-	செல்வி சாந்தி- மீரா
புவியியல்	:-	முருகையா

தூர இட மாணவர் நலன் கருதியே நேர அட்டவணைகள் தங்குமிட வசதிகள் வழங்கப்படும். (8802)

BECON

156/3, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.

A/L 89

கலை, வர்த்தகம்

மீட்டல் வகுப்புக்கள்

பொருளியல்	—	வரதராஜன்
வர்த்தகம்	—	ரட்ணம்
அளவையியல்	—	S. S. மனோகரன்
கணக்கியல்	—	மரியதாஸ்
தமிழ்	—	மீரா – தாஸ்
இந்து நாகரிகம்	—	ஜோதீஸ்வரன்

DAY CLASS

9-1-89 திங்கள் 8.00 a.m.

WEEK - END CLASS

7-1-89 சனி 9.00 a.m.

(C/1060)

வரட்சி நிவாரணம்

கேட்கும் முல்லை. விவசாயிகள்

புதுக்குடியிருப்பு, ஜன 8

பருவ மழை தப்பியதால் இந்த ஆண்டும் வேளாண்மை பாதிக்கப்பட்டுள்ளது.

கையில் இருந்த முதலை இழந்ததுடன் கடன் நிலைக்கும் தள்ளப்பட்டுள்ளோம். எனவே எமக்கு இந்த ஆண்டும் வரட்சி நிவாரணம் தந்துதவ வேண்டும்.

இத்தகைய ஒரு விண்ணப்பம் முல்லைத்தீவு மாவட்ட மக்களால் முன்வைக்கப்பட்டுள்ளது அன்மைக் கால சம்பவங்களினால் முல்லைத்தீவு மாவட்டத்தில் பெருமளவிலான பொன்விளையும் பூமிகள் வெறுமனே இருக்கின்றன.

சில இடங்களில் வேளாண்மை செய்யப்பட்ட போதும், பருவமழை தப்பியதாலும் காட்டு விலங்குகளின் அழிவுகளினாலும் அவை பயனற்றுப்போயுள்ளன

இந்நிலையில் கடன்பட்டுவிவசாயம்செய்தவர்கள் வறுமை நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளனர் விவசாயம் செய்ய முடியாது இருந்தவர்கள் ஒருவருட வேளாண்மை இல்லையே என்று அங்கலாய்க்கின்றன

இந்த ஆண்டு கொடிய பஞ்சம்தான் ஏற்படப் போகிறது என மக்கள் அஞ்சுகின்றனர்.

எனவேஎமக்கு சென்ற ஆண்டுகளைப் போன்று இந்த ஆண்டும் வரட்சி நிவாரணம் தர வேண்டும் — இவ்வாறு அந்த மகஜரில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (இ-126)

யாழ். ஆஸ்பத்திரி 5மாடிக் கட்டடம்: அரசஅதிபர் தரும் விளக்க அறிக்கை

யாழ்ப்பாணம் ஜன. 8

யாழ் போதனா வைத்தியசாலை ஐந்து மாடிக் கட்டட வேலைகள் நிறுத்தப்பட்டதைச் சுட்டிக் காட்டி 27-12-1988 உதயனில் முன்பக்க முதற் செய்தி ஒன்று வெளியிடப்பட்டிருந்தது.

அது தொடர்பாக யாழ்ப்பாணம் அரசாங்க அதிபர் திரு. வை. மு. பஞ்சலிங்கம் விளக்கமான அறிக்கை ஒன்றை அனுப்பி வைத்திருந்தார்

அதனை இங்கு பிரசுரிக்கின்றோம்.

அறிக்கை விவரம் வருமாறு:-

யாழ். போதனா வைத்தியசாலையில் அமைக்கப்பட்டுவரும் ஐந்து மாடிக் கட்டடவேலை தொடர்பாக பலதரப்பட்ட கருத்துக்கள் நிலவுவதால் இவ்வேலை சம்பந்தமான உண்மையான நிலையை பொது மக்களுக்குத் தெளிவுபடுத்த வேண்டிய அவசியம் ஏற்பட்டுள்ளது.

யாழ். மாவட்டத்தில் உள்ள 10 தேர்தல் தொகுதிகளின் ஆக்க வேலைகளுக்காக வருடா வருடம் பன்முகப்படுத்தப்பட்ட வரவுசெலவுத் திட்டத்தின் கீழ் 275இலட்சம் ரூபா நிதி ஒதுக்கீடு செய்யப்படுகிறது. இவ் ஒதுக்கீடு 10 தொகுதிகளுக்கும் பங்கிடப்பட்டு அத்தொகுதிகளின் ஆக்க வேலைகள் மேற்கொள்ளப்படுகின்றன.

மேற்காட்டப்பட்ட 5மாடிக் கட்டட வேலைகளுக்கான செலவுகளும் இந்த பன்முகப்படுத்தப்பட்ட நிதி ஒதுக்கீட்டிலிருந்தே செய்யப்படுகிறது இந்த 5மாடிக் கட்டடத்திற்காக பிரத்தியேகமாக வேறொரு நிதிஒதுக்கீடும்கிடைக்கப் பெறவில்லை.

இவ்வேலைகளுக்கான ஒப்பந்தம் 7-11-1985 இல் கைச்சாத்திடப்பட்டு வேலைகள் உடனடியாக ஆரம்பமாயின. 1987 பிற்பகுதிவரை இக் கட்டடவேலை துரிதமாக நடைபெற்று வந்தது. முடிவடைந்த வேலைகள் பரிசீலிக்கப்பட்டு கொடுப்பனவுகள் ஒப்பந்தகாரருக்கு 1987 டிசம்பர் மாதத்தில் செய்யப்பட்டது.

அலுவலகம் ஸ்தம்பித்த நிலையில்

1987 கடைக்கூறுவரை இவ்வேலை துரிதகதியில் இயங்கி வந்தது. 1987 பிற்பகுதியில் இடம்பெற்ற அசம்பாவிதங்களினாலும், அதைத் தொடர்ந்து 1988இல் நிலவிய பதற்ற நிலையாலும், சில தவிர்க்க முடியாத காரணங்களினாலும் இக்கட்டடப் பணிகளை மேற்பார்வை செய்யும் அலுவலகம் ஸ்தம்பித்த நிலையில் இருந்து வந்தது. இக் காலப் பகுதிகளில் பெரும்பாலும் வழமையான அலுவல்கள் சீராக இல்லாதிருந்தன. இதனால் கட்டட வேலைகளும், வேலைகளுக்கான கொடுப்பனவுகளும் செய்வதற்கியலாமல் இருந்தன.

1988 இல் பன்முகப் படுத்தப்பட்ட வரவு செலவுத் திட்டத்தின் கீழ் பெறப்பட்ட நிதி 275 இலட்சம் முழுமையாக இம்மாவட்டத்தில் ஆக்கபூர்வமான வேலைகளுக்குப் பயன்படுத்தப் படுவதற்கு முழு அளவில் இயங்கிய திணைக்களங்களின் மூலம் நடவடிக்கைகள் மேற்கொள்ளப் பட்டன.

செய்யப்பட்ட வேலைகள்

குறிப்பாக முன்னுரிமை அடிப்படையில் சேதமடைந்த வீதிகளை புனரமைப்பதற்கும் தார்ப்பீப்பா கொள்வனவுக்கும் 136 இலட்சம் ரூபாவும், சேதமடைந்த மின்மாற்றிகளை மீள மைப்புச் செய்வதற்கும் கிராமிய மின்சார அபிவிருத்திக்கும் 95 இலட்சம் ரூபாவும், யாழ். போதனா வைத்தியசாலை உபகரணங்களுக்கு 13 இலட்சம் ரூபாவும், தொழில்நுட்பக் கல்லூரி ஆசிரிய பயிற்சிக் கலாசாலைகள் பல்கலைக்கழகம் நுண்கலைப்பீடம் ஆகியவற்றின் உபகரணங்களுக்காக 17 இலட்சம் ரூபாவும், கல்வித் திணைக்கள கட்டட வேலைகளுக்கும் இதர வேலைகளுக்கும் 14 இலட்சம் ரூபாவும் செலவு செய்யப்பட்டு வேலைகள் பூர்த்தியாக்கப்பட்டன.

1988க்கான பன்முகப்படுத்தப்பட்ட நிதி ஒதுக்கீட்டில் ஒருசிறு தொகை தானும் செலவிடப்படாத தொகையாக திறைசேரிக்கு மீளளிப்புச் செய்யப்படவில்லை எனக்கூறிக் கொள்வதில் மகிழ்ச்சியடைகின்றேன் இந்த ஐந்துமாடிக் கட்டட வேலைக்கு வேறெவ்விதமான நிதி ஒதுக்கீடும் இல்லை என்பதை மீண்டும் இங்கு வலியுறுத்திக் கூற விரும்புகிறேன். ஆதலால் யாழ். வைத்தியசாலை ஐந்துமாடிக் கட்டடத்துக்கென ஒதுக்கப்பட்ட நிதி மீண்டும் திறைசேரிக்குச் சென்றது என்னும் செய்தி உண்மைக்குப் புறம்பானதாகும்.

இக்கட்டட வேலைகளை மீண்டும் இவ்வாண்டு தொடர்ந்துசெய்வதற்கு ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. இவ்வாறு அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

உடற் சிகிச்சைப் பிரிவு சீராக இயங்குகிறது

பருத்தித்துறை ஜன 8

பருத்தித்துறை அரசினர் ஆதார வெல்ஜியம் ஊனமுற்றோர் புனர்வாழ்வு வைத்தியத் துறையினரின் உதவியினால் வைத்தியசாலையில் உடற் சிகிச்சைப் பிரிவு ஆரம்பிக்கப்பட்டுள்ளது

பெல்ஜியம் புனர்வாழ்வு வைத்தியத் துறையின் உடற் சிகிச்சை ஆலோசக நிபுணர் திரு கிருண்ட்ஜீன் என்பவரினால் பயிற்சிகள் வழங்கப்பட்டுத் தெரிவு செய்யப்பட்ட செல்வி நாகேந்திரன் பவளேந்திரா, திரு சிதம்பரப்பிள்ளை தர்மலிங்கம் திரு. முருகேசு, சந்தவரோதயன் ஆகியோர் பருத்தித்துறைஅரசினர் வைத்தியசாலை உடற் சிகிச்சைப்பிரிவில் பணியாற்றி வருகின்றனர்.

இவ்வைத்தியசாலையின் வெளிநோயாளர்களுக்கு பிரதி புதன்கிழமைகள் தோறும் உடற் சிகிச்சை வழங்கப்பட்டு வருகின்றது.

வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ள நோயாளர்களுக்கு தினமும் இவ் வைத்திய சேவைகள்வழங்கப்பட்டு வருகின்றன.

இவ் ஊழியர்களே வல்வெட்டித்துறை அரசினர் (ஊறணி) வைத்தியசாலை நோயாளர்க [illegible] வருகின்றனர். இவ் விவரங்களை நிரட் [illegible] ஈடுபட்

எம். பிக்களுக்கு ஒழுக்கக்கோவை தயாராகிறது

கொழும்பு ஜன. 8

நாடாளுமன்ற உறுப்பினர்களுக்குப் புதிதாக நல்லொழுக்கக் கோவை ஒன்று தயாரிக்கப்படுகிறது.

இதனைத் தயாரிக்கும் பொறுப்பை ஜனாதிபதி பிரேமதாஸ அமைச்சர் அத்துலத்முதலியிடம் ஒப்படைத்திருக்கிறார். (ஒ-எ-ஐ)

மார்கழி உதயபூசை

சுழிபுரம், ஜன 8

வழக்கமாக அம்பாள் ஆலயத்தில் மார்கழி மாதகால அதிகாலை உதயப்பூசை தினமும் காலையில் நடைபெற்று வருகின்றது.

பூசகர் சு. முத்துக்குமாரசாமி பூசையை பக்திசிரத்தையாக செய்து வருகின்றார்.

வழமையான பூசைகளுக்கு முன்பாக இப் பூசை நடைபெற்று வருகின்றது. [இ-28]

பெற்றோல் தாராளம்

பச்சிலைப்பள்ளி ஜன 8

பச்சிலைப்பள்ளி பல நோக்குக் கூட்டுறவுச் சங்க பெற்றோல் நிரப்பு நிலையத்துக்கு தேவையான எரிபொருள் வந்திருப்பதாகவும் கூட்டுப்பாட்டு விலையில் எரிபொருள் விற்பனை செய்யப்பட்டு வருவதாகவும் கிளை முகாமையாளர் தெரிவித்தார் (இ-117)

பரிசுகளை வழங்கினர்

கரவெட்டி, ஜன 8

கடந்த வருடம் இறுதி வாரத்தில் இடம்பெற்ற ஒளி விழாவின் போது மறை கல்விப் பரீட்சையில் அதிகூடிய புள்ளி பெற்ற மாணவர்களுக்கு திருமலை மட்டக்களப்பு மாவட்ட முன்னாள் ஆயர் அருட்திரு. அன்றனி ஆண்டகை பரிசில்களை வழங்கினார்.

வதிரி திரு இருதயக் கல்லூரி அதிபர் திரு. எஸ் வின்சன் தலைமையில் வைபவம் நடைபெற்றது (இ 70)

இளைஞர்கள்

கிராம அபிவிருத்தியில் அக்கறை காட்ட வேண்டும்

மண்டைதீவு, ஜன. 8

இளைஞர்கள் கிராம அபிவிருத்தியில் மிகவும் அக்கறை உள்ளவர்களாக இருக்க வேண்டும். பல கிராமதானப் பணிகளை மேற்கொள்வதன் மூலம் எமது சுய தேவையை நாமே பூர்த்தி செய்யமுடியும்.

மண்டைதீவு தெற்கு கிராம அபிவிருத்திச் சங்கத்தின் வருடாந்தப் பொதுக் கூட்டத்தில் உரையாற்றும்பொழுது கிராமசேவை அலுவலர் திரு. என். சுந்தரராஜன் மேற்கண்டவாறு கூறினார்.

வேலணை கிராம அபிவிருத்தி உத்தியோகத்தர் தலைமையில் நடைபெற்ற இக்கூட்டத்தில் திரு. சுந்தரராஜன் மேலும் கூறியதாவது:-

இளைஞர்கள் ஒன்றுகூட்டுச் சேர்ந்து சமூகத்துக்கு வேண்டிய அக்கறையுடன் பணிகளைச் செய்ய வேண்டும்.

இப்பகுதியின் கல்வி, கலை சமூக அபிவிருத்திக்காக இளைஞர்கள், யுவதிகள் அயராது உழைக்க வேண்டும்' எனக் கூறினார்.

மண்டைதீவு தெற்கு கிராம அபிவிருத்திச் சங்கச் செயலாளர் திரு. எஸ். இராமச்சந்திரன் பேசுகையில்; கடந்த சில வருடங்களாக நாட்டு நிலைமை காரணமாக எமது சங்கம் முறையாகச் செயல்பட முடியாமல் போய்விட்டது. அப்படியிருந்தும் எமது சங்க உறுப்பினர்கள் இயன்றவரை எமது கிராம அபிவிருத்திக்காக உழைத்தார்கள் என்றார்.

உதவி கிராம அபிவிருத்தி உத்தியோகத்தர் செல்வி நரசிங்கம் பேசுகையில்; இயற்கையின் மூலவளங்களைப்பாவித்து சிறு கைத்தொழில்களை கிராமப் பகுதிகளில் ஆரம்பித்து அபிவிருத்தி செய்து பல இளைஞர்கள் யுவதிகளுக்கு வேலை வாய்ப்புக்களை வழங்க கிராம அபிவிருத்திச் சங்கங்கள் முன்வர வேண்டும் என்றார்.

கூட்ட இறுதியில் நடப்பு வருட நிர்வாகிகள் தெரிவும் இடம் பெற்றது. (இ- 88)

பிரிவுபசார விழா

பச்சிலைப்பள்ளி ஜன 8

கிளிநொச்சி அரசினர் வைத்தியசாலையில் கடமையாற்றி இடமாற்றம் பெற்றுச்சென்ற பத்தொன்பது உத்தியோகத்தர்களுக்கு வைத்தியசாலை நலன்புரிச் சங்கத்தினரால் அண்மையில் பிரிவுபசார விழா நடத்தப்பட்டது.

ஓய்வு வருவுவருக்கும் சுவர்க்கடிகாரமும் அன்பளிப்பாக வழங்கப்பட்டது. (இ-77)

The Christian Institute for the Study of Religion and Society

D.T.Niles Memorial Scholarship

The above scholarship is available to Protestant Christian students offering Christian Civilisation as a subject for a degree course in a Sri Lankan University Applications to be sent on or before the 30 th of January 1989 to;

A KADIRGAMAR
Acting Director
C. I. S. R. S.
Ashram,
Chunnakam.

(C/1233)

The Christian Institute for the Study of Religion and Society

WANTED

Applications are invited for the post of Director of the above Institute The Candidates should posses basic qualifications in Theology. Preference would be given to candidates with experience in the study and research in the fields of religion and society.

The Director is expected to be resident in very close proximity to the institute, house rent will be paid and vehicle provided Salary negotiable Applications to be sent before the end of February-1989 to:

A. KADIRGAMAR
Acting Director
C. I. S. R. S.
Ashram
Chunnakam.

(C 1232)

பொருள் வாங்குமாறு கூட்டுறவுச்சங்கங்களின் அங்கத்தவருக்கு நிபந்தனை

ஊர்காவற்றுறை. ஜன. 6

பல நோக்கு கூட்டுறவுச் சங்கங்களில் அங்கத்தவர்களாக உள்ள அனைவரும் தாம் அங்கம் வகிக்கும் கூட்டுறவுச் சங்கத்தின் ஏதாவது ஒரு கிளையில் மாதாந்தம் ஒரு குறிப்பிட்ட தொகைக்கு பொருள்களைக் கொள்வனவு செய்ய வேண்டும் என புதிய நிபந்தனை ஒன்று விதிக்கப்பட்டுள்ளது

கூட்டுறவுத்துறை அமைச்சினால் வெளியிடப்பட்டுள்ள சுற்றறிக்கை ஒன்று நாடு முழுவதிலுமுள்ள உதவிக் கூட்டுறவு ஆணையாளர்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. பற்றி குறிப்பிடப்பட்டுள்ளது.

அங்கத்தவர்களில் சிலர் குறைந்த தொகைப்பணத்தலைமாத்திரம் செலுத்தி அங்கத்து வத்தை பெறுவதாகவும் ஆனால் சங்கத்தோடு வேறு எந்த விதத்தொடர்பும் கொள்வதில்லை என்றும் இதனாலேயே இப்புதிய நிபந்தனை விதிக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது (இ-16)

ஊர்காவற்றுறை

நீர் விநியோகத்திட்ட சேத விவரம் சேகரிப்பு

ஊர்காவற்றுறை, ஜன.8

ஊர்காவற்றுறை பட்டணம் எல்லைகுட்பட்ட நீர் விநியோகத் திட்டத்தில் கடந்த காலங்களில் ஏற்பட்ட சேதம் பற்றி விவரங்கள் சேகரிக்கப்பட்டு வருகின்றன.

ஊர்காவற்றுறை உதவி அரசாங்க அதிபர் திரு. எஸ் எஸ். சிவரத்தினத்தின் பணிப்புரையின்படி தொழில் நுட்ப உத்தியோகத்தர் திரு. [illegible] சாரா இவ் விவரங்களை திரட்டுகின்றார்.

சேதமடைந்த நீர் விநியோக குழாய்கள், தண்ணீர் வழங்கும் பைப்புகள், இதர கொங்கிறீட் அமைப்புக்கள் ஆகியவைபற்றிய விவரங்கள் யாழ் அரசாங்க அதிபருக்கு சமர்ப்பிக்கப்பட்டு பின்னர் நிதி ஒதுக்கீடு செய்யப்படும் எனவும்-

அதன் பின்னரேயே திருத்தவேலைகள் மேற்கொள்ளப்படும். எனவும்- தெரிவிக்கப்படுகிறது. (ச-16)

முக்கிய வேண்டுகோள்

போலிகள், போலிகள்! போலிகள்!

மாஸ்டர்பீடி விநியோகஸ்தர்களே, பாவனையாளர்களே, நமது ஸ்தாபனத்தில் தயாராகும் தரமான மாஸ்டர் பீடியின் பெயரால் போலி – மாஸ்டர் பீடிகள் எமது ஸ்தாபனத்தின் பெயரைச் சொல்லி சிலரால் விற்பனை செய்வது கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. எனவே தயவுசெய்து உங்கள் மாஸ்டர் பீடித் தேவைக்கு எமது உண்மைப் பிரதிநிதிகளுடன் தொடர்பு கொள்ளவும்.

அசல் மாஸ்டர் பீடிகள்

என்றும் தரமானவை

இப்படிக்கு
நிர்வாகி
மாஸ்டர் பீடிக்கம்பனி
ஆனைக்கோட்டை.

(8618)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

ஜீவராஜ் சமந்தா பிரியதர்ஷினி

பிறப்பு: 02 - 04 - 1970 இறப்பு: 08 - 01 - 1988

காவேரிக் கங்கையவள் கண் விழிக்க
மறந்தாளோ?
தேன் அருவிபோல் இருந்த
வாழ்வுதனை இழந்தாளோ?
எப்போதும் பிரியமாட்டோம் என்று
நீ கூறுவாயே
இன்று மட்டும் ஏன் பிரிந்தாய்
என் அருமை சமந்தா வே!
வாழ்விலும் நேசித்தோம்!
மரணத்திலும் மறவோம்!!

உன் பிரிவால் வருந்தும்:
கணவன், மாமா, மாமி, பெற்றோர்,
உற்றார், உறவினர்கள்.

(8624)

1ஆம் ஆண்டு நினைவஞ்சலி

திரு. க. செல்லையா

தோற்றம்: 7 - 5 - 1932 மறைவு: 21 - 10 - 1988

எங்கள் உயிரோடு கலந்துவிட்ட அன்புத் தெய்வமே!

உங்கள் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

- குடும்பத்தினர்

அரியாலை. (8622)

நான்காவது ஆண்டு நினைவஞ்சலி

திருமதி

செல்லத்துரை பொன்னம்மா

தோற்றம்: 15. 8. 1904 மறைவு: 23. 12. 1984

திதி. 8. 1. 1989

எங்கள் வாழ்வுக்கு வழிகாட்டியாய் நின்று எங்கள் எல்லோரையும் உங்கள் அன்பால் ஆட்கொண்ட எங்களது அன்புத்தெய்வமே!

உங்கள் நினைவால் வாடும்,
மகன், மருமகள்,
பேரப்பிள்ளைகள், பூட்டப்பிள்ளைகள்,
உற்றார், உறவினர்கள்.

செ. அம்பிகைபாகன்,
கொக்குவில் கிழக்கு,
கொக்குவில். (8823)

கடந்த ஐந்து ஆண்டுகளில்:

யாழ் மீனவர்களின் வருமானம் அரைவாசியாகக் குறைந்தது

யாழ் பல்கலைக்கழக ஆய்வாளர்களின் மதிப்பீடு

யாழ்ப்பாணம், ஜன 8

கடந்த ஐந்து ஆண்டு காலத்தில் யாழ் குடாநாட்டில் அரசாங்கம் விதித்த கட்டுப்பாட்டினால் 97 சதவீதமான மீனவர்கள் தங்களுடைய தொழிலைச் சட்டுப்படுத்த வேண்டிய நிலை ஏற்பட்டது.

இவர்களின் மாதாந்த சராசரி வருமானம் 1064 ரூபாவிலிருந்து 577 ரூபாவாகக் குறைந்தது

யாழ் பல்கலைக்கழக விலங்கியல் பிரிவைச் சேர்ந்த திரு கே. சித்திரவடிவேலு கல்விப் பீடத்தைச்சேர்ந்த திரு. கே. சின்னத்தம்பி ஆகிய இருவரும் இலங்கை விஞ்ஞான முன்னேற்றச் சங்கத்துக்குச் சமர்ப்பித்துள்ள ஆய்வு அறிக்கை ஒன்றில் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளனர்.

அவ்வறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது.

''எமது நாட்டிலுள்ள மீன்பிடி வள்ளங்களில் 21 சதவீதமான இயந்திர மீன்பிடி வள்ளங்களை எமது மீனவர்கள் இழந்துள்ளனர்.

பாதுகாப்பு நடவடிக்கைகளின்போது அநேகமான மீன்பிடி வள்ளங்கள் நாசமாக்கப்பட்டன.

மிகுதி தீவிரவாதிகளால் எடுத்துச் செல்லப்பட்ட அல்லது நாசம் செய்யப்பட்டன.

சுமார் 61 சதவிகிதமான மீன்பிடி உபகரணங்கள் இழக்கப்பட்டன

மீன்பிடித் தொழிலில் ஈடுபட்டிருந்தவர்களில் 15 சதவிகிதமானவர்கள் இறந்து விட்டனர் அல்லது இந்தியாவுக்கு அகதிகளாகச் சென்றுள்ளனர்.

நான்சில் ஒரு பகுதியினர் தங்களுடைய வாகனங்களை இழந்துள்ளனர்.

பத்தில் ஒரு பங்கு வீடுகள் சேதமாக்கப்பட்டுள்ளன.

இதனால் யாழ் குடாநாட்டு மீனவர்களில் மூன்றில் ஒரு பகுதியினர் வேறு தொழில்களைச் செய்ய ஆரம்பித்துள்ளனர்.

இப்படி அந்த ஆய்வு அறிக்கை கூறுகிறது. (ச)

போக்குவரத்து சீரானது

சரவெட்டி, ஜன. 8

துணுக்காய், வரணி ஊடான பருத்தித்துறை – கொடிகாமம் போக்குவரத்துக்கள் மீண்டும் நடைபெறத் தொடங்கியுள்ளன.

இப்பகுதியில் அண்மையில் கண்ணி வெடிச் சம்பவம் ஒன்றை அடுத்தே போக்குவரத்து தடைப்பட்டது.

இதேவேளை துணுக்காயில் புதிதாக அமைக்கப்பட்டுள்ள முகாமில் சோதனை நடவடிக்கைகள் அதிகரித்திருப்பதாகக் கூறப்படுகிறது. [ஒ-70]

கரவெட்டியில் ஒளிவிழா

சரவெட்டி, ஜன. 8

நாலு போர் கூடி தங்கள் துன்ப, துயரங்களை இழப்புகளைப் பகிரும் போது ஒருவகைக் குணப்படுதல் இயல்பாகவே ஏற்படுகிறது இங்குதான் அன்பு மலரும். வார்த்தை மனுவுருவாகும். கடவுள் இவ்வுள்ளங்களில் பிறப்பார்.

கரவெவூர் செல்வம் அடிகளார் உரையாற்றுகையில் மேற்கண்டவாறு கூறினார்

கரவெட்டி புனித மரியாள் ஆலயத்தில் நடைபெற்ற ஒளிவிழாவுக்கு வதிரி திரு இருதயக் கல்லூரி அதிபர் திரு எஸ். வினசன் தலைமை வகித்தார்

கரவெவூர்ச் செல்வமும், கட்டைவேலி திருச்சபை போதகர் அருட் திரு வண. எஸ். கே. கதிர்காமமும் ஒளியேற்றி வைபவரீதியாக விழாவை ஆரம்பித்து வைத்தனர்

இறைவணக்கத்தை கரவெட்டி பங்குத் தந்தை ஜெறோஸ் செல்வநாயகம் அடிகளார் நிகழ்த்தினார்.

கிறிஸ்மஸ் செய்தியை கட்டைவேலி திருச்சபை போதகர் அருட் திரு. வண எஸ். கே. கதிர்காமர் தெரிவித்தார்.

திருகோணமலை, மட்டக்களப்பு முன்னாள் ஆயர் அன்ரனி ஆண்டகை பரிசில்களை வழங்கினார். கலை நிகழ்ச்சிகளும் இடம்பெற்றன. (இ- 70)

மண்டைதீவில்

மண்டைதீவு ஜன 8

மண்டைதீவு புனித பேதுருவானவர் இளைஞர் மன்றத்தினரால் ஒளிவிழா கொண்டாடப்பட்டது.

இப்பகுதி பங்குத் தந்தை தலைமையில் நடைபெற்ற இந்த விழாவில் பிரதம விருந்தினராக அருட் திரு. ஜீவா போல் அடிகள் கலந்துகொண்டு அருளுரை வழங்கினார் (ச 88)

புதுக்குடியிருப்பில்

225 குடும்பங்களுக்கு உணவு நிவாரணம்

புதுக்குடியிருப்பு ஜன 8

புதுக்குடியிருப்பு இராணுவ முகாம் அமைந்துள்ள 500 மீற்றர் பிரதேசத்தில் உள்ள 225 குடும்பங்களுக்கும், மீளக் குடியிருப்பு, பொருளாதார உதவி என்பன இப்போது வழங்கப்படமாட்டாது.

பதிலாக அவர்கள் மீளக்குடியேறும்வரை தொடர்ச்சியாக உணவு நிவாரணம் வழங்கப்படும்.

இத்தகைய ஒரு ஏற்பாட்டை உதவி அரசாங்க அதிபர் திரு. அ. இராசரத்தினம் முல்லைத்தீவு அரச அதிபர் திரு. க. பொன்னம்பலம் ஆகியோர் மேற்கொண்டு வருகின்றனர்.

அண்மையில் சர்வோதய நிறுவனம் இவர்களுக்கு உணவுப் பார்சல்களை அன்பளிப்புச் செய்துள்ளது.

அகில உலக இந்து பரிசாத் நிறுவனம் மூலம் உடுப்புப்பார்சல்கள் வழங்குவதற்கும் அதன் உப தலைவர் திரு போகேந்திரா துரைசுவாமி நடவடிக்கை மேற்கொண்டிருந்தார். (இ126)

தெல்லிப்பழை அரசினர் வைத்தியசாலையில்

நிரந்தர வைத்திய அதிகாரி இல்லை; நோயாளர் அவதி

காங்கேசன்துறை ஜன. 8

தெல்லிப்பழை அரசினர் வைத்தியசாலைக்கு நிரந்தர மாவட்ட வைத்திய அதிகாரி நீண்டகாலமாக இல்லாதிருப்பதால் வைத்தியசாலை நிர்வாகம் சீராக நடைபெறவில்லை எனவும் அவசர நோயாளர்களுக்கு உரிய நேரத்தில் சிகிச்சையளிக்க முடியவில்லை எனவும் தெரிவிக்கப்படுகிறது.

தெல்லிப்பழை அரசினர் வைத்தியசாலைக்கு நிரந்தரமாக மாவட்ட வைத்திய அதிகாரியை நியமிக்குமாறு வைத்திய சாலை அபிவிருத்திச் சங்கமும் மற்றும் பொது ஜன அமைப்புகளும் கோரிக்கை விடுத்துவந்த போதும் இதுவரை பலன் எதுவும் கிடைக்கவில்லை.

நீண்டகாலமாக இங்கு நிரந்தர மாவட்ட வைத்திய அதிகாரி இல்லாதிருப்பதால் வைத்தியசாலை நிர்வாகத்தை திறம்பட நடத்தவும், அபிவிருத்தி வேலைகளை மேற்கொள்ளவும் முடியாத சூழ்நிலை ஏற்பட்டுள்ளதாக கூறப்படுகிறது

நிரந்தரமாக மாவட்ட வைத்திய அதிகாரி நியமிக்கப்பட்டால் அவர் வைத்தியசாலை விடுதியிலேயே தங்கி வைத்திய சாலை நிர்வாக வேலைகளை கவனிக்கவும், அவசர நோயாளர்களை உடனுக்குடன் கவனிக்கவும் வசதி ஏற்படும்.

ஆனால் தற்போது அவ்வாறான நிலை இல்லாமையால் பெரிதும் பாதிப்பு ஏற்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது (இ-68)

சமூக சேவை நிறுவனங்களில் பெண்களும் இடம்பெறவேண்டும்

ஊர்காவற்றுறை, ஜன 8

சமூகசேவை நிறுவனங்களில் ஆண்கள் மாத்திரமே அங்கம் வகித்து வந்த காலம் மலையேறிவிட்டது. தற்போது பெண்களும் எனத் தனியான கூறாக அபிவிருத்திச் சங்கங்களும், சனசமூக நிலையங்களும் ஆரம்பிப்பதற்கு அரசாங்கம் ஆவன செய்துள்ளது. எனவே இச் சந்தர்ப்பத்தை பயன்படுத்தி பெண்கள் சமூக சேவை செய்ய முன்வர வேண்டும்.

கரம்பொன் உதயதாரகா மகளிர் சன சமூக நிலையத்தில் நடைபெற்ற பொருட்காட்சி பரிசளிப்பு விழாக்களில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு உரையாற்றும் பொழுது ஊர்காவற்றுறை உதவி அரசாங்க அதிபர் திரு. எஸ் எஸ் சிவரத்தினம் மேற்கண்டவாறு கூறினார்

மேற்படி சன சமூக நிலையத்தின் தலைவி திருமதி ஸ்ரெலா சிவரத்தினம் தலைமையில் நடைபெற்ற இவ் வைபவத்தில் உதவி அரசாங்க அதிபர் தொடர்ந்து உரையாற்று கையில்; சமூகப்பணிப்பொருள்கள் செய்வதில் ஆண்களிலும் பார்க்க பெண்களே பொருத்தமானவர்கள்.

அவர்களின் கைவண்ணத்தில் உருவான பொருள்கள் அழகு மிகுந்தவை.

எனவே எமது பிரதேசத்தில் கிடைக்கும் மூலப் பொருள்களைக் கொண்டு சமூகப்பணிப் பொருட்களைத் தாயாரிக்கலாம் மூலம் நிரந்தர வருமானத்தையும் பெறலாம் என்றார் (ச-16)

மக்கள் மகம்

மகளிர் மன்றம்

காரைநகர் ஜன 8

காரைநகர் அல்லின் வீதி ஜோர்ஜியா மகளிர் மன்றவருடாந்தபொதுக் கூட்டத்தில் பின்வருவோர் நடப்பு வருட உத்தியோகத்தர்களாகத் தெரிவு செய்யப்பட்டனர்

தலைவர்: செல்வி ஐ. புகுலேஸ்வரி உப தலைவர்: க. சாந்தி செயலாளர்: ந ஜெகதீஸ்வரி உப செயலாளர், எஸ். மேகலாதேவி. பொருளாளர்: ம காஞ்சனா தேவிகாணக்காய்வாளர் கி. மனோகலா (இ-73)

தந்தை செல்லா கிராம அபி: சங்கம்

காங்கேசன்துறை ஜன 8

தெல்லிப்பழை தந்தை செல்லா கிராம அபிவிருத்திச்சங்க வருடாந்தப் பொதுக் கூட்டம் சங்கத்தலைவர் திரு. தி. செல்லத்துரை தலைமையில் நடைபெற்றது.

பின்வருவோர் புதிய நிர்வாகிகளாகத் தெரிவாகினர்

தலைவர் திரு. தி. செல்லத்துரை உப தலைவர் திரு மு இராசலிங்கம் செயலாளர் திரு. க. லோகேஸ்வரன் உப செயலாளர் திரு. க. சண்முகநாதன் பொருளாளர் திரு. தி. அ. புத்திரன் தொண்டர் தலைவர் திரு. க. நிர்வாகசபையும் தெரிவானது. (68)

நிர்வாகிகள்

காங்கேசன்துறை. ஜன 8

தெல்லிப்பழை தெங்கு பனம்பொருள் உற்பத்தி விற்பனைக் கூட்டுறவுச் சங்கத்தின் வருடாந்தப் பொதுக் கூட்டம் அண்மையில் நடைபெற்றது.

பின்வருவோர் புதிய நிர்வாகிகளாகத் தெரிவாகினர்.

தலைவர், திரு. பூ இரத்தினம் உபதலைவர்: திரு. நா. மார்க்கண்டு. செயலாளர்: திரு. பொ. இன்பசாகரன், இயக்குநர் குழு – திரு. க. சண்முகலிங்கம் திரு. மா கந்தசாமி, திரு. செ, கந்தசாமி, திரு. நா. சணேஷ், திரு. நா. சின்னண்டி. (இ-68)

இந்து இளைஞர் திருமுறைக் கழகம்

மண்டைதீவு ஜன 8

மண்டைதீவு இந்து இளைஞர் திருமுறைக் கழகத்தின் வருடாந்த பொதுக் கூட்டம் கழகத் தலைவர் திரு க. மாணிக்கலிங்கம் தலைமையில் நடைபெற்றது.

பின்வருவோர் நடப்பு வருட நிர்வாகிகளாகத் தெரிவு செய்யப்பட்டனர்.

தலைவர் திரு க. மாணிக்கலிங்கம் செயலாளர் திரு என். விஜயசுந்தரம் பொருளாளர் பொ. செல்வகுமார், உப செயலாளர்கள் என். ராஜகோபால் என். யசுலநாதன்

மற்றும் நிர்வாகசபை ஒன்றும் தெரிவு செய்யப்பட்டது. (இ-88)

வீட்டிலிருந்து வேலைக்கு சென்றவர் துப்பாக்கிச்சூட்டுக் காயங்களுடன் இறந்து கிடந்தார்

காங்கேசன்துறை, ஜன8

வீட்டிலிருந்து வேலைக்குப் புறப்பட்டுச் சென்றவர் மறுநாள் துப்பாக்கிச் சூட்டுக் காயங்களுடன் இறந்து கிடக்கக் காணப்பட்டார்.

ஆனைக்கோட்டை முள்ளியவளச் சேர்ந்த குணரத்தினம் விஜயகுமார் (20 வயது) என்னும் வாலிபரே இவ்வாறு இறந்து கிடக்கக் காணப்பட்டவர் ஆவார்.

ஆனைக்கோட்டை பள்ளங்காடு என்னுமிடத்தில் இவரது சடலம் கிடக்கக் காணப்பட்டு இந்திய அமைதிப்படையால் தெல்லிப்பழை அரசினர் வைத்தியசாலையில் ஒப்படைக்கப்பட்டது.

மல்லாகம் பதில் நீதிபதி திரு கே. குணரத்தினம் இம்மரணம் குறித்து தெல்லிப்பழை அரசினர் வைத்தியசாலை பொலீஸ் பிரிவினர் விசாரணைகளை மேற்கொண்டனர் (இ-68)

காலமானவரின் தந்தை செ. குணரத்தினம், மாமனார் க. பத்மநாதன் ஆகியோர் சாட்சியமளித்தனர்.

கடந்த 31 ஆம் திகதி யாழ்ப்பாணத்தில் மரவேலை செய்வதற்காக வீட்டிலிருந்து புறப்பட்டுச் சென்றவர் மறுநாள் ஆனைக்கோட்டை பள்ளங்காடு என்னுமிடத்தில் சடலமாக கிடந்ததாக சாட்சியங்கள் தெரிவித்தன.

தெல்லிப்பழை அரசினர் வைத்தியசாலை வைத்திய அதிகாரி திரு. ஏ. யோககுமார் துப்பாக்கிச் சூட்டினால் மரணம் சம்பவித்ததாக தெரிவித்தார்

விசாரணை முடிவில் துப்பாக்கிச் சூட்டினால் ஏற்பட்ட கொலை என தீர்ப்பு வழங்கப்பட்டது.

தெல்லிப்பழை அரசினர் வைத்தியசாலை பொலீஸ் பிரிவினர் விசாரணைகளான ஏற்பாடுகளை மேற்கொண்டனர் (இ-68)

பாவனையாளர் சேவையை அதிகரிக்க மக்கள் கடை

ஊர்காவற்றுறை, ஜன8

ஊர்காவற்றுறை பல நோக்கு கூட்டுறவுச் சங்கம் தனது கிளை விற்பனை நிலையங்களில் நான்கை ''மக்கள் கடை'' எனப் பெயரிட்டு பாவனையாளர் சேவையை அதிகரிக்க திட்டமிடுள்ளது.

மேற்படி கூட்டுறவுச் சங்கத்தின் பொதுமுகாமையாளர் திரு. சே. தர்மராசா இதுபற்றி தகவல் தருகையில் தெரிவித்ததாவது:

தற்போது உணவுப் பொருள்கள் விற்பனையில் ஈடுபட்டு வரும் இக் கிளை நிலையங்களில் இனிமேல் மக்களின் அத்தியாவசியமான அனைத்துப் பொருள்களும் விற்பனைக்கு வைக்கப்படும்.

கூட்டங்கள் நவீன முறையில் திருத்தி அமைக்கப்பட்டு வேண்டிய அனைத்து தளபாடவசதிகளும் செய்து கொடுக்கப்படும்

கடைகள் திறக்கப்படும் நேரம் காலை ஏழு மணியிலிருந்து மாலை ஏழு மணி வரையாக இருக்கும்.

இதனால் பாவனையாளர்கள் அதிக நன்மையடைவர் கள்ளச்சந்தை வியாபாரம் குறையும். இப்படி அவர் தெரிவித்தார். (ச-16)

மண்டைதீவு ஆஸ்பத்திரிக்கு ஜெனரேட்டர் வழங்க வேண்டுகோள்

மண்டைதீவு ஜன 8

மண்டைதீவு அரசினர் பொது வைத்திய சாலைக்கு ஜெனரேட்டர் ஒன்று வழங்கி உதவுமாறு இப்பகுதி பொது மக்கள் யாழ் மாவட்ட கூகாதார பணிப்பாளரிடம் வேண்டுகோள் விடுத்துள்ளார்கள்.

கடந்த பல மாதங்களாக இப்பகுதி இருளில் மூழ்கிக் கிடப்பதால் இப்பகுதி நோயாளர்களுக்கு ஏற்பாடுகளை செய்ய போட முடியாமல் இருந்து வருகின்றது.

இவர்கள் குளிர்சாதன பெட்டி, மின்சாரம் இல்லாது செயல் இழந்து காணப்படுகின்றது.

இரவு நேரங்களில் அரிக்கன் லாம்பு வெளிச்சத்தில் தான் ஆஸ்பத்திரியில் குழந்தைப் பிரசவம் நடைபெறுவது என்பது குறிப்பிடத்தக்கது [இ 88]

அலுவலகத்திற்கான கட்டடம்

அரசாங்க நிறுவன அலுவலகமொன்றிற்கு ஏறக்குறைய மூவாயிரம் [3000] சதுர அடி அளவிலான கட்டடம் வாடகைக்குத் தேவைப்படுகின்றது! யாழ் பெரிய கடைக்கு அண்மையிலோ அன்றி கச்சேரிக்கு அண்மையிலோ இருப்பது விரும்பத்தக்கது.

தொடர்பு:-
421 மே/பா, உதயன்.

[C/ 1235]

முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

சின்னத்தம்பி நாகராசா
(செல்லு அண்ணர்)
ஆலங்குளாய், சண்டிலிப்பாய்

தோற்றம்: 18 - 11 - 1905 மறைவு: 21 - 12 - 1987

திதி: 18 - 01 - 1989

அயராது உழைத்து எம்மை அன்போடும் பண்போடும் வளர்த்தும் ஆதரித்தும் வழிகாட்டிய எமது அன்புத் தெய்வமே! உமது ஆத்மா சாந்தியடைய நாம் இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

மனைவி. மக்கள்
மருமக்கள், பேரப்பிள்ளைகள்,

(8626)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விளைச்சலைப் பெருக்குவதற்கு விவசாயிகள் சங்கம் அவசியம்

புதிய நுட்பங்களை அறிமுகப்படுத்த அது உதவும்

நாம் ஒரு விஞ்ஞான யுகத்திலேயே வாழ்ந்து கொண்டிருக்கிறோம். அதற்கேற்ப விவசாயமும் விஞ்ஞான ரீதியில் மாறவேண்டும். விவசாயிகள் விஞ்ஞான முறைகளை மேற்கொண்டு ஆக்பூர்வமான முறையிலே தமது பயிர்ச்செய்கையைக் கவனிக்கவேண்டும்.

விவசாயிகள் விவசாய விரிவாக்க உத்தியோகத்தருடன் தொடர்பு கொண்டு அவர்களுடைய ஆலோசனைகளைக் கேட்டறிந்து அவர்களுடைய சேவையைப் பயன்படுத்தவேண்டும்.

தனிப்பட்ட ஒவ்வொரு விவசாயியும் விரிவாக்க உத்தியோகத்தருடன் தொடர்பு கொள்வதோ விஞ்ஞான முறைகளை அறிந்து கொள்வதோ சிரமமான காரியம்.

விவசாயிகள் சங்கங்களை அமைத்து சங்க ரீதியில் கருத்தரங்குகளை நடத்தவேண்டும். அவற்றிற்கு விவசாய விரிவாக்க உத்தியோகத்தர்களை அழைத்து விஞ்ஞான ரீதியிலான பயிர்ச் செய்கை முறைகளை அறிந்து கொள்ள வேண்டும்.

எந்தப்பயிருக்கு என்ன கிருமிநாசினி?, கிருமிநாசினிகளை எவ்வாறு சிக்கனமாகப் பயன்படுத்துவது முதலிய விஷயங்களை இக்கருத்தரங்குகளின் மூலம் அறிந்து கொள்ளலாம்

உரம்

உரத்தைப் பொறுத்த அளவில் நைதரசன், பொஸ்பரஸ், பொற்றாஸ் ஆகியவையே செயற்கைப் பசளை மூலகங்களாகும்.

இந்த மூன்று மூலகங்களையுமே ஏதோ ஒரு ரீதியில் கலந்தே பல்வேறு பயிர்களுக்குத் தேவையான பொருத்தமான செயற்கை உரத்தைத் தயாரிக்கிறார்கள். எனவே எவ்வ என்ன பயிருக்கு எந்த எந்த ரீதியில் இந்த மூன்று மூலகங்களையும் கலத்தல் வேண்டும் என்பதை கமக்காரர் தாமே அறிந்து ஏற்ற முறையில் கலந்து உபயோகித்தால் நல்ல பலனைப் பெறலாம்.

யூறியா உரம் பயிரை வளர்க்கும் நைதரசன் மூலகம் யூறியாவில் அதிகம் இருப்பதாலேயே வளர்ச்சியை அதுஊக்குவிக்கிறது. ஆனால் காய்க்கும் பருவத்தில் அவ்வுரம் பிரயோசனப்படாது. தொடர்ந்து அதையே பாவிப்பது வீண் அனர்த்தமாகும்.

உரத்தின் சரியான உபயோகத்தை விரிவாக்க உத்தியோகத்தர் மூலம் அறிந்து எந்த எந்த உரம் எவ்வெவ்வ பயிருக்கு ஏற்றது, அதை எந்த அளவில் உபயோகிக்க வேண்டும் என்று தெரிந்து உபயோகித்தால் வீண்விரயமின்றியும் சரியான முறையிலும் உபயோகித்தது நற்பலனைப் பெறலாம்.

நிலத்தின் குறைபாடு

சிலநிலங்களிற் செய்யும் பயிர்கள் எவ்வளவு பசளை இட்டாலும் எத்தனை முயற்சி செய்தாலும் நல்ல பலனை அளிப்பதில்லை. இதற்குக் காரணம் நிலத்தின் குறைபாடு எனலாம்.

இதைக் கண்டறிவதற்கு மண்பரிசோதனை இன்றியமையாததாகும். இதற்கும் விவசாயப் பகுதியாரது உதவி எமக்குத் தேவை அவர்கள் மூலம் மண்ணிலுள்ள குறைபாட்டை அறிந்து அதை நிவர்த்தித்து மண்ணைப் பக்குவப்படுத்திப் பயிர் செய்து நன்மை அடையலாம்.

விதைகளை இடும் போதும் கன்றுகளை நடும் போதும் அவற்றை எவ்வளவு இடைவெளி விட்டு நட வேண்டும், எவ்வளவு ஆழத்தில் நட வேண்டும் நாற்றிடும் போது பாத்திகளை எப்படி பக்குவமாக அமைக்க வேண்டும் என்பவற்றைப் பற்றி எல்லாம் நுட்பமாகவும் நுணுக்கமாகவும் அறிந்து கொள்ள வேண்டும்.

போட்டியால் விலை இறக்கம்

மேற்சொன்ன விடயங்களையெல்லாம் நன்கு அறிந்து அனுசரித்து விவசாயத்தைச் செய்து விளைவைப் பெருக்கிக் கொண்டாலும் விவசாயிகளுக்கு மேலும் பல பிரச்சினைகள் ஏற்படுகின்றன.

பணப்பயிர்களாகிய உருளைக்கிழங்கு, வெங்காயம், மிளகாய் முதலியவற்றைக் கொழும்புக்கு விற்பனைக்காக அனுப்பும் போது சந்தையில் கூடுமானால் விவசாயிகள் அதனை அறிந்தவுடன் போட்டிபோட்டுக் கொண்டு நன்கு விளைந்த பயிர்களை மாத்திரமல்ல முதிர்ச்சி அடையாதநிலையிலுள்ளவற்றையும் அறுவடை செய்து அனுப்பத் தொடங்கி விடுகின்றனர்.

இதனால் சந்தைக்கு இப்பொருள்கள் ஏராளமாகச் சென்றுகுவிகின்றன. விலை சட்டென்று இறங்குகின்றது. விலை வீழ்ச்சி ஏற்படுவதால் விவசாயிகள் பெருநஷ்டம் அடைகின்றனர். அவர்கள் தங்களுக்குள் ஒரு சங்கம் அமைத்துக் கொண்டால் தங்களுக்குள் தீர்மானித்து காலத்துக்குக் காலம் அளவாக அறுவடை செய்து கணக்காகச் சந்தைப்படுத்தி விலைத் தளம்பல் ஏற்படாமற் பார்த்துக்கொள்ளலாம். ஒரே ரீதியான விலைக்கு விற்று லாபம் அடையலாம்

கிராமங்கள் தோறும் ஏற்படுகின்ற விவசாயச் சங்கங்கள் ஒன்றிணைந்து ஒரு சம்மேளனத்தை உருவாக்கினால். மேற்குறித்த பணப்பயிர்கள் அறுவடையாகும் காலத்தில், அந்தப் பொருள்களை அரசாங்கம் இறக்குமதி செய்து, அதனால் அப்பொருள்களின் விலை வீழ்ச்சியடையச் செய்யும், தகாதசெயலை உரிமையுடன் எதிர்த்துக் குரல்கொடுத்துத் தடுத்தவிட முடியும். அன்றியும், இயற்கை அழிவுகளினாலும் அசம்பாவிதங்களினாலும் பாதிப்பு ஏற்படுகின்ற காலங்களில் தங்கள் கஷ்டங்களை அரசாங்கத்துக்கு எடுத்துக் காட்டி வாதாடி ஏற்ற நிவாரணத்தைப் பெற்றுக் கொள்ள முடியும்.

இன்னும் தமக்கு ஏற்படுகின்ற வேறுவித குறைபாடுகளையும், ஏற்படுகின்ற, காலத்தில், நிவர்த்திப்பதற்கான கோரிக்கைகளை முன் வைத்து அவற்றை வென்றெடுக்கத் தக்க நடவடிக்கைகளை எடுக்கலாம். (இ-க)

சே. ஐயாத்துரை
தலைவர்
சமநலக் குழுக்களின் சமாஜம், யாழ்ப்பாணம்.

ஆசிரிய சேவைக்கால முன் பயிற்சி பெறுவோர்

யாழ்ப்பாணம் ஜன 8
ஆசிரிய சேவைக்கால முன் பயிற்சி பெறவுள்ள கலைப்பட்டதாரி ஆசிரியர்களின் பெயர்ப்பட்டியல் யாழ் கல்வித் திணைக்களத்தினால் வெளியிடப்பட்டுள்ளது.

165 பட்டதாரி ஆசிரியர்களின் இரண்டாவது பகுதி வருமாறு:-

51 செல்வி என். ஆறுமுகம் கழிபுரம், 52 செல்வி ஆர். சண்முகநாதன் கோப்பாய். 53 செல்வி எம். முத்துசாமி மயிலிட்டி. 54 செல்வி வி. குமாரசுவாமி திருநெல்வேலி. 55 செல்வி ரி. தம்பிப்பிள்ளை கரவெட்டி. 56 செல்வி யு இரட்ணேஸ்வரி வட்டுக்கோட்டை. 57 அருணாசலம் ரவி சிறுவிளான், 58 செல்வி எம். வினாசித்தம்பி யாழ்ப்பாணம். 59 செல்வி வை. சின்னத்துரை யாழ்ப்பாணம், 60 எஸ் மோட்சநாதன், முல்லைத்தீவு.

61 செல்வி எஸ். அப்புத்துரை சண்டிலிப்பாய், 62 செல்வி வசந்தி சுந்தையா பருத்தித்துறை, 63 சே. விமலநாதன் வட்டுக்கோட்டை, 64 திருமதி எம் விமலநாதன் புத்தளம், 65 திருமதி ஜே. ஏ. ஆனந்தராசா அல்லைப்பிட்டி. 66 எஸ். சாலியாகானம் கல்வியங்காடு, 67 செல்வி ஆர். சண்முகநாதன் திருநெல்வேலி, 68 செல்வி கெதின்குமாரி உடுப்பிட்டி, 69 செல்வி பி. தனேஸ்வரன் மன்னார், 70 செல்வி சே. ராதாகிருஷ்ணன் கோப்பாய்,

71 எம். ராதாகிருஷ்ணன் சுன்னாகம், 72 செல்வி ரி. செல்வதுரை மானிப்பாய், 73 செல்வி எஸ். நடராசா தாளையடி, 74 செல்வி சே நடராசா இணுவில், 75 எம். ஹறிதரன் அல்லைதீவு, 76 திருமதி சுசிலா ரவி சாவகச்சேரி 77 எஸ் பாலராஜ் வேலணை-6, 78 செல்வி ரி. சுப்பிரமணியம் கொக்குவில். 79 செல்வி ஜே இராமநாதன் மன்னார். 80 செல்வி ஆர். இராஜேந்திரம் கோப்பாய்,

81 செல்வி ரி. பொன்னம்பலம் வதிரி, 82 ஜே. சபாரத்ன சுன்னாகம். 83 எஸ். ஆர். எஸ். எலிசபெத் அச்சுவேலி, 84 செல்வி எஸ். சிவகுரு அச்சுவேலி, 85 செல்வி எஸ். தங்கவடிவேல் பருத்தித்துறை, 86 தி. பிரபாகரன் கோப்பாய், 87 செல்வி ஏ. குமாரசாமி கோப்பாய், 88 சே. கனகசபாபதி தாளையடி. 89 செல்வி ஏ அருணாசலம் வேலணை, 90 செல்வி வி. கனகசபை திருநெல்வேலி,

91 செல்வி கே. குணரத்தினம் வேலணை, 92 செல்வி எஸ். தியாகராசா [illegible] 93 செல்வி கே. [illegible] தர்மலிங்கம் பருத்தித்துறை, 94 செல்வி எஸ். அப்புத்துரை உரும்பராய் 95 செல்வி எம். செல்வராசா கரவெட்டி, 96 செல்வி எஸ் ஸ்ரீகாந்தன் வட்டுக்கோட்டை, 97 செல்வி ஆர். இராசையா அல்வாய், 98 ஜி அஷ்ரவ் சாவகச்சேரி, 99 செல்வி ரி. குமாரசுந்தரம் அளவெட்டி. 100. செல்வி வி. திருமகள் வேலணை-5

101 செல்வி சி. செல்வராசா, வேலணை 7. 102 செல்வி ஏ. அமலா ஜெயவதி. பருத்தித்துறை 103 செல்வி ஜி. இராசையா, நீர்வேலி. 104 செல்வி ஜே. பரமகுரு. பருத்தித்துறை 105 செல்வி கே. மீனாம்பிகை, கொடிகாமம் 106 செல்வி ஐ. பெரியதம்பி, கொடிகாமம். 107 தி. கணேசபாலேந்திரன் கொடிகாமம். 108 செல்வி கே. நடராசா, சாவகச்சேரி. 109 செல்வி கே. நமசிவாயம் வேலணை-3. 110 செல்வி எஸ். இராமநாதன், நீர்வேலி.

111 செல்வி எஸ். குணநாயகம், திருநெல்வேலி. 112 செல்வி யசோதா சின்னையா, கோப்பாய். 113 எஸ். பஞ்சாட்சரம், கைதடி. 114 செல்வி வி. விஜயரட்ணம், உரும்பராய். 115 செல்வி பி. தமிழேஸ்வரி, மண்டைதீவு 116 செல்வி எஸ். ராமசாமி, தெல்லிப்பளை 117 செல்வி வி. மார்க்கண்டு, கொடிகாமம். 118 பி. ஜோதீஸ்வரன், அல்வாய். 119 பி ஜெகதீஸ்வரன், வேலணை. 120 செல்வி எஸ். ராஸா, மயிலிட்டி.

121 ஆர். தனபாலசிங்கம் [illegible] 122 செல்வி [illegible] 123 செல்வி சுசிலாதேவி பருத்தித்துறை 124 கே. தவராசா, வசாவிளான். 125 எம். நாகராசா, அத்தியடி, யாழ்ப்பாணம். 126 செல்வி வி விஜயராஜா, சண்டிலிப்பாய். 127 செல்வி என். நந்தினிதேவி, கரவெட்டி. 128 செல்வி ஏ. லவ்சேஸ்வரி, பருத்தித்துறை. 129 செல்வி கே. எஸ் சேவியர் யாழ்ப்பாணம். 130 செல்வி விமலா, யாழ்ப்பாணம்

131 செல்வி வி. ரஞ்சிதமலர். மிருசுவில். 132 செல்வி வி. ஜெயரஞ்சிதம், இளவாலை. 133 செல்வி ரி லிங்கநாதன். கிளிநொச்சி. 134 செல்வி கே. கே. குருக்கள், பரந்தன். 135 எஸ் விநாதன், பரந்தன். 136 ஐ. குகானந்தராஜா, கிளிநொச்சி.

137 செல்வி எஸ் அருணாசலம், கிளிநொச்சி. 138 கே. குணபாலசிங்கம், பளை. 139 வி. பரமசோதி, வவுனியா 140 செல்வி வி. சிவலோகவதி. ஓமந்தை.

141 செல்வி பி. செல்லத்துரை, வவுனியா. 142 செல்வி வி ரட்ணசிங்கம், ஓமந்தை. 143 எஸ். ஜேசுதாசன், செட்டிகுளம். 144 செல்வி வி. பத்மநாதன். பூவரசங்குளம் 145 செல்வி வி. மோகனராஜ், வவுனியா. 146 செல்வி ஜே வேலுப்பிள்ளை, வவுனியா 147 செல்வி ஆர். சுகிர்தநாயகம், ஓமந்தை. 148 செல்வி ஐ. பேர்சிமன்ஸ், வவுனியா. 149 எஸ் நித்தியானந்தன், வவுனியா. 150 செல்வி வி. மார்க்கண்டு, புளியங்குளம்

151 ஆர். ஜெயக்குமார். முல்லைத்தீவு. 152 செல்வி என் கனகையா, முள்ளியவளை. 153 செல்வி கே. கனகதுரை, யோகபுரம். 154 ஆர். ரங்கநாதன், முள்ளியவளை. 155 செல்வி எல். வல்லிபுரம், முல்லைதீவு 156 வி. சிவ [illegible]

(தொடர்ந்து பார்க்க)

வாசகர் திருமுகம்

போக்குவரத்துப் பாதைகளை பராமரிக்கசில ஆலோசனைகள்

அபிவிருத்தி அடைந்து வரும் இலங்கையைப் போன்ற பின் தங்கிய நாடுகளில் போக்குவரத்துப் பாதைகள் நல்ல நிலையில் அமையவேண்டும்.

தூரதிருஷ்டவசமாகச் சென்ற பொதுதைத்து, முப்பது வருடங்களாக நாட்டின் வீதிகள், மக்குகள், பாலங்களில் பெரும்பாலானவை முறையே பராமரிக்கப்படவில்லை இதனால அவை மிகவும் ஆபத்தான விபத்துக்கள் ஏற்படக் கூடிய நிலையில் இப்போது உள்ளன. விசேடமாக வட கிழக்குப் பிரதேசங்கள் இவ்விடயத்தில் மாற்றாந்தாய் மனப்பான்மையில் கணிக்கப்பட்டு நாளாந்தம் விபத்துக்களும், உயிர்ச்சேதங்களும் ஏற்படுகின்றன

மக்களும் பொறுப்பற்ற முறையில் வீதிக்காணிகளைக் கூட்டிப்பிடித்தும், சுற்றுமதில்கள், கடைகள், வீடுகளைக் கூடக் கட்டியும் வருகின்றனர். சிலர் மதகுகள், பாலங்களுக்குள்ளே மலசலம் கழித்தும், வேறு சிலர் குடும்பமாகவும் வாழ்கின்றனர். கழிவுப் பொருட்களை வீதியின் இருமருங்கும் கொட்டுவதும் சாதாரணமான வழக்கமாகி விட்டது

முதல் வேலையாகச் சகல வீதிகள், ஒழுங்கைகள், மதகுகள், பாலங்கள், வெள்ள வாய்க்கால்கள் பேருந்து ஸ்தாபனங்கள் போன்றன சுவனிக்கப்படவேண்டும். ஒருவித பாரபட்சமும், ஊழலுமில்லாமல் ஒரு அமைப்பின் கீழ் மேற்குறித்த சுவலதும் நிருவகிக்கப்படவேண்டும் தனி அமைச்சு மூலம் பராமரிப்பு வீதி அபிவிருத்தி இயக்கத்தை உருவாக்கி, சிரமதான இயக்கங்கள் மூலமாகவும் மக்களது பங்களிப்பைப் பெற்று இவற்றைப் பராமரிக்கவேண்டும்.

பணம் இல்லையென்று சாட்டுச் சொல்லக்கூடாது. பாதுகாப்புக்கென வீணாகும் பணத்தில் ஒருபகுதியை ஒதுக்கலாம்.

யோ அருள்

பலாலி தெற்கு,
வயாவிளான்.

தேவை

Fitters | Welders | Mechanics / Helpers

யாழ் நகரிலுள்ள பிரபல நிறுவனமொன்றிற்கு மேற்கண்ட துறைகளில் வேலை அனுபவம் உள்ளவர்களும், வேலை பழகுவோரும் தேவை. 16-1 89க்கு முன் பூரண விபரங்களுடன் விண்ணப்பிக்கவும்.

விளம்பர எண் : 422.
292/2, நாவலர் வீதி,
(C/1844)

மே. பா. / உதயன்,
யாழ்ப்பாணம்.

89 A/L விஞ்ஞான மாணவர்கட்கு

துரித மீட்டல் இரசாயனவியல்
Mon. 2-15 — 4-15 p. m.
ஆரம்பம்: 09-01-89
Mr. நாகரட்ணம் B Sc.
3rd Cross Street, JAFFNA.
(C/1237)

Project Management Services Ltd.

VACANCIES FOR HIGHWAY ENGINEERS

We are on the lookout for experienced Highway Engineers, Technicians and Surveyors to join our design and construction management teams. Work will be mainly confined to the Northern and Eastern Provinces Applicants should submit their detail Bio-Data and their references with regard to geographical areas of work Applications on behalf of Engineers presently Abroad will also be entertained. In the case of the latter, details of their present place of work and date of possible availability should be indicated We also invite applications on behalf of Engineers presently Abroad, for special short term Specialist Consultancy Assignments on design work.

Categories are as Follows:

1. Senior Chartered Engineers with a minimum of 15 years post charter experience on major civil engineering works of which at least 10 years should have been on Roadworks. Design office experience will qualify for special recognition.
2. Chartered Engineers with 5 to 10 years post charter field experience of which at least 5 years should have been on Roadworks.
3. Graduate Engineers and N D T Holders with a minimum of 5 years field experience of which at least 3 years should have been on Roadworks.
4. Draughtsmen with design office experience on Roadworks.
5. Surveyors with Roadworks setting out and survey - experience
6. Supervisors with at least 3 years experience (Local or in a Foreign Country) on mechanised road constructi n works Should have worked on DBST SBST Road works Should have experience working with mechanical broom s-chip spreaders - bitumen sprayers - compaction equipment - graders - dozers etc
7. Equipment Operators and Mechanics, with experience in heavy equipment - dozers, scrapers, vibro - rollers steel wheeled / pneumatic tyred rollers 15/20 Ten capacity tippers mechanical brooms, bitumen distributors sprayers, chip spreaders, paving machines asphalt premix plants.
8. Operators / quarry masters, with at least 5 years experience in operating crusher plants and quarries.

Applicants Should be Forwarded To:

-The Director
Project Management Services Ltd.,
33, Brown Road, Jaffna.

To Reach this office on or Before
20 January 1989.

[C-1115]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொலீஸ் மா அதிபரின் கட்டுப்பாட்டில்

கொழும்பு. ஜன 8 நாட்டின் தேசிய உளவு நிறுவனம் பொலீஸ் மா அதிபரின் கட்டுப்பாட்டின் கீழ் கொண்டுவரப் பட்டுள்ளது.

அரசு உயர் மட்ட வட்டாரங்கள் இதனைத் தெரிவித்தன

தற்சமயம் உளவு நிறுவனத்தின் தலைவர் பாதுகாப்பு அமைச்சுக்கே பதிலளிக்க வேண்டியவராக இருந்து வருகிறார். (இ-எ)

பருத்தித்துறை கிழக்கில்

ஆரம்பக் கல்வி ஆசிரியர் பற்றுக்குறையை நீக்குக

தமிழர் ஆசிரியர் சங்கம் கோரிக்கை

பருத்தித்துறை, ஜன. 8

பருத்தித்துறை கிழக்குக் கஷ்டப் பிரதேசத்தில் நிலவும் ஆரம்பக் கல்வி கற்பிக்கும் ஆசிரியர்களின் பற்றுக் குறையை நீக்க உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டும்.

பருத்தித்துறை இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கத் தலைவர் திரு. தோ. செபமாலை யாழ். பிரதேசக் கல்விப் பணிப்பாளர் திரு வெற்றிவேலு சப நாயகத்திடம் கோரிக்கை விடுத்துள்ளார்.

அவர் தமது கடிதத்தில் குறிப்பிட்டதாவது:

வடமராட்சி கோட்டக் கல்விப் பிரிவில் இன்றும் இரு பாடசாலைகள் தனி ஆசிரியர் பாடசாலைகளாக இயங்கி வருகின்றன

மிகவும் கஷ்டப் பிரதேசமான கேவில், போக்கறுப்பு ஆகிய பகுதிகளில் நிலவும் ஆசிரியர் பற்றுக்குறையைப் போக்க முதலில் கவனம் செலுத்த வேண்டியுள்ளது.

உடுத்துறைக் கொத்தணியில் சுமார் 40 ஆரம்பக் கல்வி போதிக்கும் ஆசிரியர்களுக்கும் நாகர் கோவில் கொத்தணியில் சுமார் 20 ஆரம்பக்கல்வி போதிக்கும் ஆசிரியர்களுக்கும் பற்றுக்குறை தொடர்ந்து நிலவுகிறது.

தற்போது வெளியாகவுள்ள புதிய ஆசிரியர்களின் பட்டியலில் ஆகுந்தாவது அல்லது ஏற்கனவே கிராம சேவகர் பிரிவின் அடிப்படையில் தரிவு செய்யப்பட்டவர்களில் இருந்தாவது இந்த ஆசிரியர் பற்றுக்குறை நீக்கப்படவேண்டும்.

பருத்தித்துறை கிழக்குக் கஷ்டப் பிரதேசத்திற்குரிய பாடசாலைகளின் ஆசிரியத் தேவையைக் கணக்கிடும்போது பாடசாலைகளுக்குத் தேவையான ஆளணியினரை இப் புதிய ஆசிரியர்களைக் கொண்டு நிரப்ப வேண்டும்.

சமூகக் கல்வி, ஆங்கிலம் தமிழ் விஞ்ஞானம், கணிதம் உட்பட ஏனைய பாடங்களையும் இப் புதிய ஆசிரியர் ஆளணியினர் மூலம் கற்பிக்க பாடசாலை அதிபர்கள் முயற்சிக்க முடியும்

இவ்வாறு செய்தன் மூலம் இப் பகுதியில் நீண்ட காலமாகச் சேவை யாற்றும் ஆசிரியர்களை இடமாற்றம் செய்யவும் உதவியாக இருக்கும்

பருத்தித்துறை கிழக்குக் கஷ்டப் பிரதேசத்தின ஆசிரியர் பற்றுக்குறையைப் போக்க கிடைத்த சந்தர்ப்பத்தையாவது யாழ் கல்வித் திணைக்களம் நல்ல முறையில் பயன் படுத்தும் என்று நம்புகிறேன்.

இவ்வாறு அக்கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (இ-118

நியமனக் கடிதங்கள் வழங்கப்பட்டன

யாழ்ப்பாணம் ஜன 8

யாழ்ப்பாணத்தில் ஆரம்ப சேவைக் காலப் பயிற்சி நெறியை முடித்துக்கொண்ட மூன்றாம் தொகுதி ஆசிரியர்களுக்கு நியமனக் கடிதங்கள் வழங்கப்பட்டன.

நியமனக் கடிதங்கள் நேற்றும் நேற்று முன் தினமும் யாழ். கல்வித் திணைக்களத்தில் வைத்து வழங்கப்பட்டன. (ஒ-10)

நிவாரணம் பெற்றனர்

புதுக்குடியிருப்பு, ஜன 8

சென்ற வெள்ளிக் கிழமை வங்கி விடுமுறை நாளாக இருந்த போதும் தேவிபுரம் மக்கள் தமது நிவாரணப் பணத்தைப் பெற்றுக் கொண்டனர்

இதற்கானஏற்பாட்டை இலங்கை வங்கி மேற்கொண்டது இதற்கான போக்குவரத்து வசதியைஉதவி அரசாங்க அதிபர் திரு அ. இராசாகதினம் ஏற்பாடு செய்தார்.

நாடாளுமன்று விஸ்தரிப்பு

கொழும்பு ஜன 8

நாடாளுமன்றக் கட்டடத்தை விஸ்தரிக்கும் வேலைகள் நடைபெறுகின்றன

புதிய நாடாளுமன்றத்தில் 225 எம்பிக்கள் இருந்தனர்

தற்போதைய நாடாளுமன்றக் கூடடத்தில் 168 எம்.பிகளுக்கே இட வசதிகள் உள்ளன. (உ-ச்)

பதவி உயர்த்தப்பட்டுள்ள தமிழ்நாலக உத்தியோகத்தர்

இலங்கையிலுள்ள உள்ளூராட்சி மன்றங்களில் நூலகப் பொறுப்பாளர்களாவும் நூலக உதவியாளர்களாக வும் கடமையாற்றிய பதினெட்டு தமிழ் நூலக உத்தியோகத்தர்களை உள்ளூராட்சி அமைச்சு நூலகர் தரம் III ற்குப் பதவி உயர்த்தியுள்ளது

இத்தகவலை உள்ளூராட்சிச் சேவைப் பணிப்பாளர் திரு. எச். ஏ. விமலகுணவர்த்தன அறிவித்துள்ளார்.

பதவி உயர்வு பெற்றவர்களின் விபரம் வருமாறு:-

திரு. எம் செல்லப்பாகம், திரு. எம் ஸ்ரீகாந்தன், திரு எஸ். அருளம்பலம் (சாவகச்சேரி நகரசபை), திரு. வி. பாலசுப்பிரமணியம் (சாவகச்சேரி. பிரதேச சபை,) செல்வி. எஸ் தேவமலர் (நல்லூர் பிரதேசசபை), செல்வி. எம். கனகேஸ்வரி [சாவகச்சேரி பிரதேசசபை], திரு. ஏ. என். எஸ். திருச்செல்வம் (பருத்தித்துறை பிரதேசசபை], செல்வி.ரீ. சிவனேஸ்வரி (மண்முனை பிரதேசசபை] ஜனாப் மொகிதீன் பாலாசிரதினு ஷா [கல்முனை பிரதேசசபை] ஜனாப் பரிது அப்துல் நவார் (கல்முனை பிரதேசசபை], திரு.எஸ். சுந்தரலிங்கம் [சாவகச்சேரி நகரசபை),

திரு. எம். ரவீந்திரன் (மானிப்பாய் பிரதேசசபை),

திரு. எம் பரமேஸ்வரன் [சாவகச்சேரி, நகரசபை), செல்வி கே புஸ்பவதி[மண்முனை பிரதேசசபை], செல்வி ஏ. புஸ்பராணி (கரைச்சி பிரதேசசபை), செல்வி. ஆர். ரஞ்சனி (ஊர்காவற்றுறை பிரதேசசபை) ஜனாப் கலீமை லெப்பை அப்துல் ஜபார் (அட்டாளைச்சேனை பிரதேசசபை), ஜனாப் சம்சுலுகா பாலி நயினா மொகமது (கல்முனைப்பிரதேசசபை

கடந்த 12- 9- 1988 27. 9 1988 திகதிகளில் கொழும்பு உள்ளூராட்சித் திணைக்களத்தில் நடைபெற்ற நேர்முகப் பரீட்சைகளின் பெறுபேறாகவே இத் தமிழ் நூலக உத்தியோகத்தர்கள் பதினெட்டுப் பேரும் உள்ளூராட்சிச் சேவையின் நூலகர் தரம் III க்குப் பதவி உயர்த்தப்பட்டுள்ளனர் (இ-113]

4ஆம் ஆண்டு நினைவஞ்சலி



ஆள்வார் கணபதிப்பிள்ளை
(ஆலா)

நான்காண்டு சென்றாலும் உங்களை இன்று அன்புடன் நினைவுகூரும்!

நடுவில் பிள்ளை, மகா, கமலா, இந்தி, சரோ, கௌரி, பேபி, மற்றும் உற்றார், சின்னத்தம்பி, சின்னப்பாப்பா குடும்பத்தினர், அன்புக்குரியவர்கள்.

சுரணவாய் வடக்கு.
08 01-1989 (C/1107)

1ம் ஆண்டு நினைவஞ்சலி

சின்னத்தம்பி நாகராஜா

தோற்றம். மறைவு:
16 - 11 - 1905 21 - 12 - 1987

திதி: 8. 1. 1989

எங்கள் அன்புத் தெய்வத்தின் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கும்:
அன்பு மனைவி, மக்கள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்,
சகோதரர்கள்,
மற்றும் உற்றார். உறவினர்கள்.
(8818)

"ஷப்ரு" வழங்கும் புதிய வட்டி வீதம்

நிலையான முதலீட்டுத் திட்டம்

காலம்	மாதாந்தம்	முதிர்ச்சி
3 மாதங்கள்	—	15 %
6 மாதங்கள்	15 %	17 %
12 மாதங்கள்	18 %	20 %
24 மாதங்கள்	21 %	23 %
36 —	22 %	24 %

நிறுவனத்தின் நிதி நிலை விபரம்

	1984 → 85	1985 → 86	1986 → 87
மூலதனம்	2,230,000	4,365,000	5,917,000
மொத்த ஒதுக்கம்	1,385,335	3,030,474	5,425,354
வைப்பு	27,737,553	58,970,366	100,577,492
வங்கிக் கடன்கள்	1,791,516	8,283,816	7,718,284
ரொக்கமும் வங்கி இருப்பும்	4,386,371	16,206,887	25,811,712
வைப்பாளருக்கான வட்டி செலுத்து முன் லாபம்	5,783,720	9,876,026	19,310,787
வைப்பாளருக்கான வட்டி	3,827,514	8,505,201	16,880,875
வரிசெலுத்து முன் தேறிய லாபம்	1,956,206	1,372,825	2,430,012
வரிசெலுத்தியபின் தேறிய லாபம்	1,356,206	1,372,825	2,330,012
பங்காளருக்கான சலுகைகள்			

ஷப்ரு அன்பளிப்புக் கலண்டர்கள்

- பேரியளவில் - மாதம் ஒரு பக்கம் கொண்ட மூவர்ணக் கலண்டர்
- ஜனவரி முதலாம் திகதிமுதல் விநியோகம்!!
- வாடிக்கையாளர்கள் எமது யாழ் அலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

பணிப்பாளர் சபை

திரு. எல். பி. ஈ. கருணாரத்ன, சட்டத்தரணி, சமாதான நீதிவான் (தலைவர்)
திரு. எஸ். பாலசுப்பிரமணியம், (A. I. B. Lond.). முகாமைப் பணிப்பாளர்
திரு. ஜே. டி. நவரட்ணம், (A. I. B; Lond.). பொது முகாமையாளர்
திரு. ஏ. எம். எச். பாரி, B. A. (Hons.)
திருமதி ஆர். பாலசுப்பிரமணியம்

SHABRA

207, மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி 22073—24805

61, பௌத்தலோக மாவத்தை, கொழும்பு-4
தொலைபேசி: 589310, 500576

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
உண்மை – விறுவிறுப்பு – ஆக்கம்
இல. 292/2 நாவலர் வீதி, யாழ்ப்பாணம். தொலைபேசி 21805 22073
08. 01. 1989 த. பெ இல 23

பொன்மொழி

குறள்:

அறிவின்மை இன்மையுள்
இன்மை பிறிதின்மை
இன்மையா வையாது உலகு.

பொருள்:

அறிவில்லாமையே இல்லாமை பலவற்றுள்ளும் கொடிய இல்லாமையாகும்; மற்ற இல்லாமைகளை உலகம் அத்தகைய இல்லாமையாகக் கருதாது.

சோதனை ஒன்று
செய்து பார்த்தால் என்ன?

வருட ஆரம்பத்துடன் மேற்கொள்ளப்பட்ட கல்விச் சேவை நியமனங்கள் குறித்துக் கண்டனக் குரல் எழுப்பப்பட்டுள்ளது. கல்விச் சேவை நியமனங்கள், பதவி உயர்வுகள் குறித்து இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கம் கவலை தெரிவித்துத் தீர்மானம் நிறைவேற்றி உள்ளது.

ஸ்ரீலங்கா கல்விச்சேவை இரண்டாம் தரபதவி உயர்வில் வடமாகாணத்தைச் சேர்ந்த எவரும் இடம்பெறவில்லை. அதிபர் தரம் I, II, III ஆகியவற்றுக்கான பதவி உயர்வில், தகுதி உள்ள பலரும் புறக்கணிக்கப்பட்டுவிட்டனர்.

இவ்வாறு ஆசிரியர் சங்கத்தின் தீர்மானத்தில் கவலை தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

கல்விச் சேவை இரண்டாம் தரப் பதவிக்கு யாழ்ப்பாணம், மட்டக்களப்பு, வவுனியா, மன்னார், கொழும்பு ஆகிய மாவட்டங்களிலிருந்து 125க்கும் மேற்பட்ட தமிழர்கள் நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்பட்டிருந்தனர்.

ஆனால் மூன்றே முன்று தமிழர்களுக்கு மட்டுமே பதவி உயர்வு கிடைத்தது. இத்தனைக்கும் பல தமிழ் மாவட்டங்களில் இந்தப் பதவி நிலை உத்தியோகத்தர்களுக்குப் பற்றாக்குறை நிலவுகிறது.

அதே போல—

அதிபர் தரம் II, III இல் 52 தமிழர்களுக்குப் பதவி உயர்வு கிடைத்திருக்க வேண்டும். ஆனால் அரசாங்கம் இந்த ஆண்டு வழங்கியதோ பதினெட்டுப் பேருக்குத்தான்.

தமிழ்ப் பகுதிகளுக்கான ஆசிரியர், அதிபர், அதிகாரிகள் விடயத்தில் கல்வி அமைச்சு இவ்வாறு பாகுபாடு காட்டுவதும், புறக்கணிப்பு நடத்துவதும் ஏன்?

ஆசிரியர்கள், அதிபர்கள், அதிகாரிகள் இல்லாமல் தமிழ்ப் பகுதி மாணவர்கள் உரிய கல்வி வசதிகளைப் பெறுவது எப்படி?

தமிழர்களின், எதிர்காலத் தமிழ்ப் பிரசைகளான இன்றைய தமிழ் மாணவர்களின் கல்வி வளர்ச்சியை சாகடிக்கும் அரசின் நீண்ட கால உள் நோக்கத்தில் மாற்றம் எதுவுமில்லை என்பதையே பாகுபாடும், புறக்கணிப்பும் எடுத்துக் காட்டுகின்றன.

தமிழர்கள் கல்வித் துறையில் வளர்ச்சி கண்டு விட்டதால் தான் தமக்கு உரிமைகள் கேட்டுப் போராடுகிறார்கள். அந்தப் போராட்டத்தை மழுங்கடிக்க அவர்களின் கல்வி வளர்ச்சியைத் தடுப்பது நல்ல மார்க்கம் என்று அரசில் உள்ள அதிகாரிகளும், அமைச்சரும் நினைத்து விட்டார்களா?

தமிழர்களும் இந்த நாட்டுப் பிரசைகள் என்று அரசும், அமைச்சரும் கருதினால் பாகுபாட்டுக்கும் புறக்கணிப்புக்கும் இடம் ஏது?

கல்வி ஒரு மனிதனின் அடிப்படை உரிமை; பிறப்புரிமையும் கூட. அதனை நசுக்க எடுக்கப்படும் எந்த நடவடிக்கையும் மனித உரிமை மீறலுக்கு உடந்தையானதாகும்; ஒப்பானதுமாகும்.

போதிய ஆசிரியர்கள், அதிபர்கள், அதிகாரிகளை நியமிக்காது புறக்கணிப்பதும், கல்வி வசதி உரிமை மீறலுக்கு உதவுவதே; உடந்தை போலதே.

ஆகவே இது விடயத்தில் நீதி மன்றத்தின் நிலைப்பாடு என்ன என்று அறிவதற்கு அதிகாரிகள், அமைச்சர் மீது அடிப்படை உரிமை மீறல் மனு ஒன்றை ஆசிரியர் தொழிற்சங்கங்கள் தாக்கல் செய்து பார்க்க வேண்டும். அப்படிச் செய்வது ஒரு பரீட்சார்த்த நடவடிக்கையாக அமையலாம் அல்லவா?

மற்றும் பல துறைகளில் தமிழர்கள் இரண்டாம்தரத்தினராக நடத்தப்படுவதை எதிர்த்து நீதிமன்ற நடவடிக்கை எடுக்கவும், பாகுபாடும், புறக்கணிப்பும் மேற்கொண்டு இடம்பெறாமல் தடுக்கவும் பரீட்சார்த்த 'சோதனை' உதவலாம்.

அமைச்சர்கள், அதிகாரிகளின் காலில் விழுந்து அல்லது பேட்டி கண்டு ஒரு சிலருக்கு உதவுவதை விட்டு, உறுதியான ஒரு 'சோதனை'யைச் செய்வது பல வகைகளாலும் நன்மை தரும் என்பது எமது கருத்து.

இந்தியத்தூதரகம் முன்னால் 'போலித்தூக்கு' நாடகம்:

லண்டனில் சீக்கியர் ஆர்ப்பாட்டம்;
பஞ்சாப்பில் பதினொரு பேர் படுகொலை!

சத்வன்சிங், கேஹர்சிங் தூக்கிலிடப்பட்டதற்கு

லண்டன், ஜன 7

லண்டனில் இந்தியத் தூதரகத்தின் முன்னால் நேற்று 100க்கு மேற்பட்ட சீக்கியர்கள் ஆர்ப்பாட்டம் நடத்தினர்.

இந்திராகாந்தியைக் கொலை செய்வதற்காக இரண்டு சீக்கியர்களைத் தூக்கிலிடப்பட்டது போன்று ஒரு போலித் தூக்கிலிடும் காட்சி ஒன்றையும் ஆர்ப்பாட்டக்காரர்கள் தூதரகத்தின் முன்னால் நடத்திக் காட்டினார்கள்.

சத்வன்சிங், கேஹர்சிங் ஆகியோரைத் தூக்கிலிட்டதால் காலிஸ்தான் போராட்டம் ஓய்ந்து விடாது—

இப்படி ஆர்ப்பாட்டக்காரர்கள் கோஷங்களை எழுப்பினர்; சுலோகங்களைப் பிடித்த வண்ணம் நின்றனர்.

சத்வன்சிங்கும் கேஹர்சிங்கும் போர்க்காலக் கைதிகள் என்று கருதி விடுதலை செய்யப்பட்டிருக்க வேண்டும் என்று அவர்கள் தெரிவித்தனர்.

இதனிடையில் பஞ்சாப், அமிர்தசரஸில் இருந்து 40மைல் தூரத்தில் உள்ள விவசாயக் கிராமம் ஒன்றில் 11பேர் சுட்டுக்கொல்லப்பட்டனர்.

இந்திராகாந்திகொலை வழக்கு எதிரிகள் இரண்டு பேரையும் தூக்கிலிட்டதற்கு எதிர்ப்புத் தெரிவிக்குமுகமாக இப்படுகொலை இடம்பெற்றதாகத் தெரிவிக்கப்படுகிறது. (எ)

சார்க் பாஸ்போர்ட்

இஸ்லாமபாத், ஜன 7

சார்க் அமைப்பு நாடுகளைச் சேர்ந்தவர்கள் உபயோகிக்கக் கூடியதாகபொதுபாஸ்போர்ட் வழங்கப்படவுள்ளது.

'சார்க் பாஸ்போர்ட்' என்று இது அழைக்கப்படும்.

ஆரம்பத்தில் இப்பாஸ்போர்ட் சார்க் அமைப்பில் உள்ள நாடுகளின் எம். பிக்கள், உயர்நீதிமன்ற நீதியரசர்கள் ஆகியோருக்கே வழங்கப்படும்.

இப் பாஸ்போர்ட் சார்க் அமைப்பு நாடுகளுக்கு இடையே பயணஞ் செய்ய உதவும்.

கம்யூனிஸம் செத்துவிட்டது; இஸ்லாத்தைப் படியுங்கள்!
கோர்பச்சேவுக்கு கொமேனி அறிவுரை

மாஸ்கோ, ஜன. 7

கம்யூனிஸம் செத்துவிட்டது. இஸ்லாத்தை அக்கறையுடன் படியுங்கள்.

ஈரானின் ஆத்மீகத் தலைவரான ஆயதுல்லா கொமேனி, சோவியத் ஜனாதிபதி மிக்கெய்ல் கோர்பச்சேவுக்கு முன் கண்ட புத்திமதியைக் கூறியிருக்கிறார்.

கொமேனி, விசேட தூதர்மூலம் சோவியத் தலைவர் கோர்பச்சேவுக்கு சில தினங்களுக்கு முன்னர் சிறப்புச்செய்தி ஒன்றை அனுப்பி வைத்திருந்தார். அச்செய்தியிலேயேஇப்புத்திமதியை கொமேனி கூறியிருந்தார் என்று, கொமேனியின் பிரதம உதவியாளரான அவரின் மகன் அஹ்மத் தெரிவித்தார்.

கொமேனியின் செய்தியை அவரின் விசேட தூதர்ஆயதுல்லாஜாவதி அமொலி, ஜனாதிபதி கோர்பச்சேவிடம் நேரிற் கையளித்தார்;

சிறப்புச் செய்தியில் கொமேனி கூறியிருந்ததாவது:

கம்யூனிஸம் செத்துவிட்டது; தீவிரமாக இஸ்லாத்தைப் படியுங்கள்.

அரசியல் சரித்திரம் சம்பந்தமான உலக மியூசியத்தில்தான் கம்யூனிஸத்தை வைக்கவேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது என்பதை ஒவ்வொருவரும்தெளிவாகப்புரிந்து கொண்டு விட்டார்கள்.—

இப்படி அச்செய்தியில் கூறப்பட்டிருந்தது.

அரசியல் சீர்திருத்தத்தைக் கொண்டுவர திரு. கோர்பச்சேவ் காட்டும்

துணிச்சலை கொமேனி வெகுவாக தனது செய்தியில் பாராட்டியிருக்கிறார். (எ)

ஜப்பானில் 6நாள் துக்கம்

சக்கரவர்த்தி ஹிரோஹிட்டோவின் மறைவுக்கு ஜப்பான் 6 நாள் துக்கம் அனுஷ்டிக்கிறது. பங்கு மார்க்கட்டுகள் உடனடியாக மூடப்பட்டன.

பிரதமர்தாகஷிட்டோ மறைந்த சக்கரவர்த்திக்கு புகழாரம் சூட்டினார்.

ஆனால் ஜப்பான் கம்யூனிஸ்ட் கட்சி மறைந்த மன்னரின் யுத்தகால நடவடிக்கையைக் கண்டித்தது. [எ]

பாரிஸ் மாநாடு

பாரிஸ், ஜன.7

இரசாயன ஆயுதங்களின் உற்பத்தியை தடைசெய்வது பற்றிய சர்வதேச மாநாடு இன்று பாரிஸில் ஆரம்பமாகிறது.

140 நாடுகளின் அமைச்சர்கள், பிரதிநிதிகள் மாநாட்டில் கலந்து கொள்கின்றனர். [எ]

ஜப்பானின் 125ஆவது சக்கரவர்த்தி அகிஹிட்டோ 4 நிமிடபதவி ஏற்பு

டோக்கியோ, ஜன 8

ஜப்பானின் 125ஆவது சக்கரவர்த்தியாக 55 வயதான முடிக்குரிய இளவரசர் அகிஹிட்டோ நேற்றுப் பொறுப்பு ஏற்றுக் கொண்டார்.

காலமான சக்கரவர்த்தி ஹிரோஹிட்டோவின் பூதவுடலின் அருகில் இப்பதவி ஏற்பு இடம் பெற்றது.

சக்கரவர்த்திக்குரிய ராஜசின்னமும் புனிதவாளும் அகிஹிட்டோவிடம் சம்பிரதாய பூர்வமாக கையளிக்கப்பட்டன

பிரதமர் நாகஷிட்டோவும் இராஜ குடும்பத்தின் ஏனைய உறுப்பினர்களும் இந்நிகழ்ச்சியில் கலந்து கொண்டனர்

இதனிடையில் மறைந்த சக்கரவர்த்திக்கு அமெரிக்க அதிபர் றேகன் அனுதாபச் செய்தி அனுப்பி வைத்தார்.

இரண்டாம் உலக யுத்தத்தின் போது அவர் காட்டிய வீர தீரத்தை திரு றேகன் நினைவு கூர்ந்தார்,

பூதவுடலுக்கு ஜப்பானிய செம்படை வீரர்களும் சென்று மரியாதை செலுத்தினர், அப்போது பாதுகாப்பை பொலீஸார் பலப்படுத்தி இருந்தனர். (எ)

'ஸ்டெனோ'வுக்கு பதில் வீடியோக் கமரா

வாஷிங்டன், ஜன. 7

ஸ்டெனோகிராபர்களுக்குப்பதில் அமெரிக்க நீதிமன்றங்களில் வீடியோ கமராக்கள் பயன்படுத்தப்படவுள்ளன.

நான்கு கடவுட்டி நீதிமன்றங்களில் வீடியோ கமராவினால் நீதிமன்ற விசாரணை நடைமுறைகளை தினசரிப் பதிவு செய்யும் முறை இரண்டாண்டுகளுக்கு பரீட்சார்த்தமாக மேற்கொள்ளப்பட வுள்ளது.

இந்த நீதிமன்றங்களில் நீதிபதிகளுக்கு அருகில் ஸ்டெனோகிராபர்களுக்குப் பதில் வீடியோ கமராக்காரர்கள் இருப்பர். செலவைக் குறைக்கவே இந்த மாற்று நடவடிக்கை என்று தெரிவிக்கப்படுகிறது.

வீடியோக் கமராக்களுக்கு வருடாந்தம் 36 ஆயிரம் டாலர் முதல் 42 ஆயிரம் டாலர் சம்பளம் வழங்கப்படுகிறது; சில நீதிமன்ற ஸ்டெனோகிராபர்கள் ஆண்டுக்கு 1 லடசம் டாலர் பெறுகின்றனராம்.

வீடியோக் கமரா முறைக்கு ஆண்டுக்கு 25 ஆயிரம் டாலரே செலவாகும் என்றுகூறப்படுகின்றது. (எ)

கடத்தப்பட்டனர்

இராணுவத்தில் இருந்து விலக்கப்பட்ட வீரர்கள் மற்றும் பொலீஸாரும் சேர்ந்து பிலிப்பீன்ஸ் இராணுவ ஜெனரல் ஒருவரையும் கேர்னல் ஒருவரையும் கடத்திச் சென்றதாக அறிவிக்கப்படுகிறது. [எ]

மாற்று இருதயம் பெற்றவர்மரணம்

கேம்பிரிட்ஜ் ஜன 7

பிரிட்டனில் நீண்ட காலம் மாற்று இருதயத்துடன் வாழ்ந்து வந்த ஒருவர் அண்மையில் ஒன்பது ஆண்டுகள் கழித்து மரணமானார்.

அவரின் பெயர் நிகல் ஒல்னி.

இரண்டு வாரங்களுக்கு முன்னர் அவருக்கு இரண்டாவது மாற்று இருதயம் பொருத்தப்பட்டது.

முதலாவது மாற்று இருதயம் அவருக்கு 1980ஆம் ஆண்டு ஜனவரியில் பொருத்தப்பட்டது.

ஈரான்கேட் வழக்கு விசாரணை
அமைச்சர் ஷுல்ட்ஸுக்கும் அழைப்பாணை

வாஷிங்டன், ஜன. 7

ஈரான் கேட் வழக்கு விசாரணையில் சாட்சியமளிக்கும்படி அமெரிக்க வெளியுறவு அமைச்சர் ஜோர்ஜ் ஷுல்ட்ஸுக்கு நீதிமன்றம் உத்தரவிட்டிருக்கிறது.

ஈரானுக்கு ஆயுதம் விற்றதனால் கிடைத்த வருமானத்தை நிக்கரகுவா அரசுக்கு எதிராக போராடும் கொன்ருகிளர்ச்சியாளர்களுக்கு வழங்கியதாக அமெரிக்க வெள்ளை மாளிகை அதிகாரி கேர்னல் ஒலிவர் நோர்த் மீது குற்றஞ் சாட்டப்பட்டிருக்கிறது.

ஜனாதிபதி றேகன், உப ஜனாதிபதி புஷ், அமைச்சர் ஷுல்ட்ஸ் ஆகியோரின் பணிப்புரையின் மீதுதான் செயல்பட்டதாக ஒலிவர் நோர்த் கூறியிருக்கிறார்.

நீதிமன்றம் ஏற்கனவே சாட்சியமளிக்க நீதிமன்றம் வரும் றேகன், புஷ் ஆகியோருக்கு அழைப்பாணை அனுப்பியிருக்கிறது. (எ)

2,600 ஆண்டுகால ஜப்பானிய முடியாட்சியில்
சரித்திரம் படைத்த சக்கரவர்த்தி ஹிரோஹிட்டோ

ஜப்பானின் 124 ஆவது சக்கரவர்த்தி ஹிரோஹிட்டோ 87 ஆவது வயதில் மறைந்துவிட்டார் சரித்திரத்தில் இடம்பெற்று விட்ட அவர் பற்றிய ஒரு கண்ணோட்டம் இங்கு பிரசுரமாகின்றது.

63 ஆண்டுகள் ஆட்சி புரிந்த ஜப்பான் சக்கரவர்த்திஹிரோஹிட்டோ 87ஆவது வயதில் இன்று சனிக்கிழமை அதிகாலை காலமானார்.

2,600ஆண்டுகால ஜப்பானிய முடியாட்சியில் இவர் 124ஆவது சக்கரவர்த்தியாவார்.

29-4-1901இல் பிறந்தார். 24ஆவது வயதில் (25-12-1926) ஜப்பானின் சகல அதிகாரங்களும் பெற்ற சக்கரவர்த்தியாக முடிசூட்டினார்.

அப்போது ஜப்பான் அரசு நிர்வாகம் அனைத்தும் சக்கரவர்த்தியிடம் தான் இருந்தது' அவர் சொற்படிதான் அமைச்சர்கள் செயல்பட்டனர்; முப்படைகளும் செயல்பட்டன.

ஜப்பானை இராணுவமயப்படுத்துவதில் இவர் மும்முரமாக ஈடுபட்டு வெற்றியும் கண்டார்.

இரண்டாம் உலக மகாயுத்தத்தின் போது ஜப்பான் இவரின் தலைமையில் பல சாகஸங்களைப் புரிந்தது.

முதலில் சீனாமீது ஜப்பான் படை எடுத்தது. அதன்பின்னர் அமெரிக்கா, பிரிட்டன் ஆகிய நாடுகளுடனும் ஜப்பான் யுத்தத்தில் ஈடுபட்டது. சக்கரவர்த்தி ஹிரோஹிட்டோவே ஜப்பானை அப்போது வழி நடத்தினார்.

ஜப்பான் யுத்தத்தில் அடைந்துவரும் வெற்றியைக் கண்டு உலக நாடுகள், அச்சமடைந்தன ஜப்பானை அடக்க ஒரே ஒரு வழி அணுக்குண்டு பயோடுவதே என்று அமெரிக்கா தீர்மானித்தது; [illegible] நாகஸாகி-ஹிரோஷிமா [illegible] மீது அணுக்குண்டு வீசப்பட்டது. லட்சக்கணக்கானோர் ஈக்கள் போல் மடிந்தனர். தாக்குதலில் காயமடைந்தோர் இன்னமும் மடிந்துகொண்டு தான் இருக்கின்றனர்.

இரண்டாம் உலக மகாயுத்தத்தில் ஜப்பான் தோல்வியைத் தழுவக் காரணமாக இருந்தது, நாகஸாகி-ஹிரோஷிமா ஆகிய நகரங்கள் மீது அமெரிக்கா அணுக்குண்டுத் தாக்குதல் நடத்தியதே.

அதன்பின்னர் தான் ஜப்பான் சரணடைவதாக சக்கரவர்த்தி ஹிரோஹிட்டோ அறிவித்தார்.

போர்க்காலக் குற்றங்களுக்காக ஜப்பானின் அரசியல்வாதிகள் பலர் தூக்கிலிடப்பட்டனர்; இதைச் சகித்துக் கொள்ள முடியாத ஹிரோஹிட்டோ, "யுத்தத்தை நான் தனிப்பட்ட முறையில் எதிர்த்[illegible]

[illegible] ஹிரோஹிட்டோ ஜப்பானை ஈடுபடவைத்ததும் குறித்து ஜப்பானியர்கள் மத்தியில் இன்னும் சரித்து வேற்றுமை நிலவுகிறது.

ஜப்பானின் அழிவுக்குக் காரணம் ஹிரோஹிட்டோ தான் என்று அணுக்குண்டு தாக்குதலின போது அழிந்த நாகஸாகி நகரின் மேயர் அண்மையில் குற்றஞ் சாட்டியிருந்தார்.

அணுக்குண்டினால் தனது மக்கள், நாடு அழிந்ததைக் கண்ணுற்ற சக்கரவர்த்தி மனம் வெதும்பினார்.

மக்களால் 'வாழும் கடவுளாக' மதிக்கப்பட்டு வந்த சக்கரவர்த்தி ஹிரோஹிட்டோ தோல்விகாரணமாகத் தனது 'தெய்வீகத் தன்மை'யை துறந்தார். சகல செயல் அதிகாரங்களையும் கைவிடுவதாக அவர் அறிவித்தார்.

அதைத் தொடர்ந்து ஜப்பானின் அரசியல் யாப்பு மாற்றி அமைக்கப்பட்டது.

சக்கரவர்த்தி ஒரு சம்பிரதாய பதவியாக கருதப்பட வேண்டும் என்று ஜப்பானிய புதிய அரசியல் யாப்பு தெரிவித்தது

மக்களால் தெரிவுசெய்யப்பட்ட ஆட்சிமுறை ஜப்பானில் அமுலுக்கு வந்தது

இருந்தும் ஜப்பானியர்கள் சக்கரவர்த்தியை 'வாழும் கடவுள்' ஆகவே மதித்து வருகின்றனர்.

சூரியக் கடவுளின் வழித்தோன்றலே ஜப்பானிய சக்கரவர்த்திப் பரம்பரை என்று ஜப்பானியர்கள் நம்புகின்றனர்.

சக்கரவர்த்தி ஹிரோஹிட்டோவின் உயிர் பிரியும்போது அவரின் மூத்த புதல்வரும் புதிய சக்கரவர்த்தியாக முடிசூட்ட இருப்பவருமான முடிக்குரிய இளவரசர் அகிஹிட்டோ(வயது 55) வும் ஜப்பான் பிரதமர் தாகஷிட்டோவும் அருகில் இருந்தனர்.

கடந்த நான்கு மாதங்களுக்கு மேலாக ஹிரோஹிட்டோ மரணப் படுக்கையில் குடல் புற்றுநோயினால் பீடிக்கப்பட்டுக் இருந்தார்.

உலகிலே நீண்ட காலமாக ஆட்சி புரிந்த சக்கரவர்த்தி என்று பெருமை பெற்றவர் ஹிரோஹிட்டோ.

அது மட்டுமல்ல, அணுக்குண்டு வெடித்தவுடன் மக்கள் எப்படிச் சாவார்கள் என்பதற்கு தனது மக்களையே உதாரணமாக உலகுக்குக் காட்டியவர் என்ற குற்றச் சாட்டுக்கும் இலக்கானவரும் இவரே என்றும் கூறப்படுகிறது

இரண்டாம் உலக மகாயுத்தத்தின் மூலம் சரித்திரத்தில் ஜப்பானை இடம்பெறச் செய்ததனால் சக்கரவர்த்தி ஹிரோஹிட்டோவும் ஒரு சரித்திர புருஷர் ஆகிவிட்டார் அல்லவா!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சேமிக்க சூப்டிங்ஸ்
✶ குழந்தைகளுக்கான ஆடைகள் சகலவிதமான
✶ றெடிமேட் ஆடைகளுக்கும்
சிறந்த இடம்
மயூரா சென்ரர்
1 3B, நவீனசந்தை. :-: யாழ்நகர்.

உதயன்

08 - 01 - 1989 ஞாயிற்றுக்கிழமை

திருமண வைபவங்களுக்கேற்ற
✶ மணிப்புரி
✶ காஞ்சிபுரம் ✶ பெனாரஸ்
சேலைகளைப் பெற்றுக்கொள்ள
மயூரா சென்ரர்
13B, நவீன சந்தை, யாழ்நகர்.

கொலை - கடத்தல்களை அடுத்து மூதூரில் பதற்றம் நீடிப்பு

மூதூர், ஜன. 8

மூதூர் நகரில் இன்னும் வழமைநிலை திரும்பவில்லை. இதனால் இப் பிரதேசமக்களின் அன்றாட வாழ்க்கை பாதிக்கப்பட்டுள்ளது.

கடந்த 29-ஆம் திகதி வியாழன் இரவு மூதூர் நகரில் முஸ்லீம்நபர் ஒருவர் இனந்தெரியாதவர்களால் மர்மமானமுறையில் வெட்டிக் கொலை செய்யப்பட்டார்.

மறுநாள் வெள்ளிக்கிழமை முதல் மூதூர்நகரில் பதற்றம் நிலவத் தொடங்கியது.

இதனைத் தொடர்ந்து மூதூர் ஆலிம் சேனைப் பகுதியில் இரு தமிழ் இளைஞர்கள் இனந்தெரியாதவர்களால் கடத்தப்பட்டனர்.

இந்த இரு தமிழ் இளைஞர்களினதும் கடத்தலை அடுத்து இரு முஸ்லீம் இனததவர்கள் இனந் தெரியாதவர்களால் வெட்டிக் காயப்படுத்தப்பட்டனர்.

இவர்கள் திருகோணமலை வைத்தியசாலையில் சிகிச்சைபெறுகின்றனர்.

இவைகளினால் மூதூர்ப் பகுதியில் தமிழ் முஸ்லீம் மக்களிடையே இனஉறவு வெகுவாகப் பாதிப்படைந்துள்ளது.

மூதூர் நகரில் கடைகள் அடிக்கடி மூடப்பட்ட நிலையில் உள்ளன. சில சந்தர்ப்பங்களில் குறிப்பிட்ட சில நேரங்களில் மட்டும் கடைகள் திறந்திருக்கின்றன.

போக்குவரத்து வெகுவாகப் பாதிப்படைந்துள்ளது.

துப்பாக்கிப் பிரயோகம்

கொழும்பு, ஜன. 8

அம்பலாந்தோட்டையில் உள்ள பொலீஸ் அதிபர் ஜி. ஆரியதாஸவின் வாசஸ்தலத்தின் மீது இனந்தெரியாதோர் துப்பாக்கிப் பிரயோகஞ் செய்தனர்.

கடந்த புதன்கிழமை இச்சம்பவம் இடம் பெற்றது.

தாக்குதலைத் தொடர்ந்து அவரின் வீட்டில் இருந்த உறவினரான எஸ். குணசேகரா என்பவரை அக்கோஷ்டி கடத்திச் சென்றது என்று பொலீஸார் தெரிவித்தனர். (இ-எ)

எலிபன்ட் ஹவுஸ்

கொழும்பு, ஜன. 8

எலிபன்ட் ஹவுஸ் நிறுவனம் அவசரசாலச் சட்டம் காலாவதியானபின் எரும் அரசின் கட்டுப்பாட்டிலேயே இருக்கும்.

நிறுவனத்தின் தகுதி வாய்ந்த அதிகாரியாகப் பணியாற்றும் திரு அனுரா குணசேகரா இத்தகவலை வெளியிட்டார்.

மானிப்பாய் இந்து

அண்மையில் வெளிவந்த ஜீ.சி.ஈ. உயர்தரப் பரீட்சையில் மானிப்பாய் இந்துக் கல்லூரி மாணவர்கள் பெற்ற சிறந்த பெறுபேறுகள் வருமாறு.

பௌதீக விஞ்ஞானத் துறையில் ஒருவர் ஏ. 2சி எஸ்.

ஒருவர் ஏ. சி. 2எஸ்
மூவர். பி. 2சி எஸ்

உயிரியல் விஞ்ஞானத் துறையில் ஒருவர் ஏ. 3பி
ஒருவர் பி. 2சி. எஸ்.

வர்த்தகத் துறையில் மூவர் 2பி. 2சி. மூவர் பி. 3சி

கலைத்துறையில் ஒருவர் 2பி. 2சி.

இந்தக் கல்லூரியில் இருந்து பல்கலைக்கழக அனுமதிக்கு விண்ணப்பிக்க 29 பேர் தகுதி பெற்றுள்ளனர். (இ-5)

உலகில் நிமிடத்துக்கு ஒருவர் தற்கொலை!

கொழும்பு, ஜனவரி 8

உலகில் நிமிடத்துக்கு ஒருவர் தற்கொலை செய்கின்றார்

இலங்கையில் ஒரு லட்சம் பேரில் 20 ஆண்களும் 2 பெண்களும் தற்கொலை புரிகின்றனர்.

பிரபல உளவியல் நிபுணர் டாக்டர் தயா நாத் சமரசிங்கா கொழும்பில் நடந்த கருத்தரங்கு ஒன்றில் பேசுகையில் முன்கண்ட தகவலை வெளியிட்டார்.

தற்கொலை செய்வதைத் தடுக்க முடியுமா? -இத்தலைப்பில் இக்கருத்தரங்கு இடம்பெற்றது.

அவர் மேலும் சொன்னதாவது;

உலகில் பெண்களிலும் பார்க்க ஆண்கள் அதிக எண்ணிக்கையில் தற்கொலை செய்கிறார்கள்.

1981 இல் இலங்கையில் ஒரு லட்சம் பேரில் ஒரு பெண்ணும் 14 ஆண்களும் தற்கொலை செய்தனர். இப்போது அந்த எண்ணிக்கை அதிகரித்து உள்ளது.

ஏனைய நாடுகளிலும் பார்க்க இலங்கையில்தான் தற்கொலை செய்வோரின் எண்ணிக்கை அதிகமாக உள்ளது; இலங்கைக்கு அடுத்த இடத்தை ஜப்பான் பிடித்து உள்ளது.

தற்கொலை முயற்சியில் பெண்கள் ஈடுபடுவது தற்போது அதிகரித்து வருகிறது. தமது விருப்பங்கள் நிறைவேற முடியாத நிலையில் விரக்தி காரணமாக பெண்கள் தற்கொலைசெய்து கொள்கிறார்கள்.

தேசத்துக்கு ஆபத்து, நெருக்கடி ஏற்படும் சமயங்களில் தற்கொலைகள் குறைந்து காணப்படுகின்றன.

வயதுபோனவர்கள் மத்தியில்தான் தற்கொலை பனப்பான்மை அதிகமாகக் காணப்படுகிறது.

ஆனால் இலங்கையில் இளைஞர் சமுதாயத்தில் தான் தற்கொலைகள் அதிகரித்துள்ளன.

இப்படி அவர் சொன்னார். (இ-எ)

சங்கீதம்...

(1ம் பக்கத் தொடர்ச்சி)

ளார்,

கொழும்பில் நடைபெற்ற பிரஸ்காதசெயல் முறைப் பரீட்சைக்குப் பலருக்கு அழைப்புக் கடிதங்கள் கிடைக்கவில்லை. பலர் பயணம் செய்ய முடியவில்லை.

இவர்களை உடனடியாக யாழ்கல்வித்திணைக்களக் கல்வி நிர்வாகக்கிளை உடன் தொடர்புகொள்ளும்படி கல்விப் பணிப்பாளர் வேண்டுகோள் விடுத்துள்ளார். (இ-5)

பெண் மதகுருவுக்குப் பிரியாவிடை

யாழ்ப்பாணம், ஜன 8

மெதடிஸ்த சபையின் முதலாவது பெண் மதகுருவாக யாழ்ப்பாணத்தில் கடமையாற்றிய வண. செல்வி ரஞ்சிதராணி இரத்தினசிங்கத்துக்கு இன்று பிரியாவிடை வைபவம் ஒன்று நடத்தப்படுகிறது.

சென்பிற்றர்ஸ் தேவாலய ஞாயிறு ஆராதனையின் பின்பு இந்த வைபவம் இடைபெறும்.

வண செல்லி ரஞ்சிதராணி இரத்தினசிங்கம் திருகோணமலைக்கு இடமாற்றம்பெற்றுச் செல்கிறார் என்பது குறிப்பிடத்தக்கது. (இ

3750 பேர்...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

தலைமையில் கூட்டம் நடைபெற்றது.

ஜனாப் அஷ்ரப் தொடர்ந்து உரையாற்றுகையில் கூறியதாவது:

முஸ்லிம்களின் வாக்குகள் இன்று அர்த்தமுள்ள, விலைமதிக்க முடியாத வாக்குகளாக மாறியுள்ளன.

எமது ஒற்றுமையே இதற்குக் காரணமாகும். கடந்த மாகாண சபைத் தேர்தலின் போது முஸ்லிம்கள் ஏகோபித்து முஸ்லிம் காங்கிரஸிற்கு வாக்களித்ததால் இந்த நிலை தோன்றியுள்ளது.

இந்த ஒற்றுமை மணல் வீடாக ஒருபோதும் மாறிவிடக்கூடாது

இப்படி அவர் கூறினார். (இ-14)

ஆசிரிய...

(5 ம் பக்கத் தொடர்ச்சி)

157 செல்வி வி. இந்திரா, முல்லைத்தீவு. 158 செல்வி எம். ராஜேந்திரம், முல்லைத்தீவு. 159 செல்வி கே' மகேஸ்வரி முல்லைத்தீவு, 160செல்வி எஸ். தியாகராசா, முல்லைத்தீவு.

161 செல்வி எஸ். செலவநாயகம், முள்ளியவளை 162 செல்வி ஏ. பி. மாக்ரெல், முல்லைத்தீவு. 163 எஸ். ஜெயபாலன், முள்ளியவளை 164 செல்வி எஸ். கணபதி, [illegible] 165 [illegible]

பயிற்சி பெறும்

மாணவ தாதிகளுக்கு ரூபா 1,100 அலவன்ஸ்

யாழ்ப்பாணம் ஜன 8

சுகாதார அமைச்சினால் அரசாங்க ஆஸ்பத்திரிகளில் முன்பயிற்சி பெறும் மாணவ தாதிகளுக்கு மாதாந்தம் ரூபா 1,100 அலவன்ஸ் வழங்கப்படும்

மேற்காண்டவாறு சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகத்தினால் அனுப்பி வைக்கப்பட்டுள்ள சுற்றறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

சகல பிராந்திய பணிப்பாளர்களுக்கும் அனுப்பி வைக்கப்பட்டுள்ள சுற்றறிக்கையில் கூறப்பட்டுள்ளதாவது:-

3750 மாணவ தாதிகள் இப்பயிற்சிக்குவாரிட் வசதியுள்ள ஆஸ்பத்திரிகளில் அனுமதிக்கப்படுவார்கள்.

எதிர்வரும் ஆண்டுகளில் கட்டம் கட்டமாக தாதிகள் பயிற்சிக்கல்லூரிகளில் அனுமதிக்கப்படுவார்கள்.

இருவார காலப் பயிற்சியின் பின்பு பின்வரும் எண்ணிக்கையில் வைத்திய சாலையில் அனுமதி பெறுகிறார்கள்.

மாகாண ஆஸ்பத்திரி-60
ஆதாரவைத்தியசாலை30
மாவட்ட வைத்தியசாலை - 10
பி.பி. ஆஸ்பத்திரி - 10
கிராமிய ஆஸ்பத்திரி-05

பயிற்சியாளர் வதிவிட சுற்றுடல் ஆஸ்பத்திரிகளில் தான் அனுமதிக்கப்படுவதில்முன்னுரிமை பெறுவார்கள்.

காலை 7 00 — மாலை 4 மணி வரை பயிற்சி வழங்கப்படும் ஒருமணித்தியாலம் மதிய உணவு இடைவேளை வழங்கப்படும். (இ-21)

Mr. Ben. Emerson

உடுவிலைப் பிறப்பிடமாகக் கொண்டவரும், மட்டுவில் தெற்கு சாவகச்சேரியை வசிப்பிடமாகக் கொண்டவரும், முன்னாள் கிளிநொச்சி, பிராந்திய விவசாய ஆராய்ச்சி நிலைய பிரதி பணிப்பாளரும், தற்போது திருநெல்வேலி விவசாய ஆராய்ச்சி நிலையத்தில் பணிபுரிபவருமான திரு. Ben. Emerson அவர்கள் காலமானார்கள்.

அன்னார் திருமதி அரியமலர் அவர்களின் அன்புக் கணவரும், பிரதீப்குமார், ராஜ்குமார், தேவகுமார், அஞ்சலின் ஆகியோரின் அன்புத் தந்தையும், திருமதி சுமித்திராவின் மாமனாரும், காலஞ்சென்ற திரு. ஜெயபாலன், திருமதி இன்பமலர், பொன்னையா, திருமதி பத்மாவதி செல்லையா (உதவி அதிபர் உடுவில் மகளிர் கல்லூரி) ஆகியோரின் அன்புச் சகோதரரும் ஆவார்.

அன்னாரின் இறுதிச் சடங்குகள் பற்றிய விபரங்கள் பின்னர் அறிவிக்கப்படும்.

மட்டுவில் தெற்கு.
சாவகச்சேரி.

தகவல்:
திரு. பிரதிப்குமார்.

(8632)

வேலுப்பிள்ளை அன்னம்மா

காரைநகர் கோவளத்தைச்சேர்ந்த வேலுப்பிள்ளை அன்னம்மா 7-1-89இல் காலமானார்.

இவர் காலம்சென்ற சி.வேலுப்பிள்ளை அவர்களின் அன்புமனைவியும், பரம்சோதி, சிவசோதி ஞானசோதி, (சோதி ஜுவலர்ஸ் யாழ்) அருள்சோதி, இரத்தினசோதி, ஆகியோரின் அன்புத்தாயுமாவார். இறுதிக் கிரியைகள் 8-1-89 இன்று பகல் 10 மணியளவில் காரைநகர் சாம்பலோடை மயானத்தில் நடைபெறும்.

தகவல்:
கு. குமாரதேவன்

கோவளம்,
காரைநகர். (8623)

வல்லிபுரம் மாணிக்கம்

முன்னைநாள் நீர்ப்பாசனத் திணைக்களஇளைப்பாறிய பிரதம லிகிதரும். அரசாங் ஒய்வூதியர் சங்கம், தி/மயான அபிவிருத்திச் சபை, தி/பத்திரகாளி கோயிலடி ஐக்கிய நாணய சங்கம் ஆகியவற்றின் தலைவரும், திருநெல்வேலி பலநோக்குக் கூட்டுறவுச் சங்கப் பொதுச்சபை உறுப்பினருமாகிய திரு. வல்லிபுரம் மாணிக்கம் அவர்கள் காலமாகிவிட்டார்.

அன்னார் அன்னலட்சுமியின் அன்புக் கணவரும் குலேந்திரன் (பிரான்ஸ்), இந்திராணி, செல்வராணி, கெங்காதேவி, ஆகியோரின் அன்புத் தந்தையும், கந்தசாமி (மத்திய நெல் ஆராய்ச்சியாளர் - பத்தலகொட), சரோஜினிதேவி (பிரான்ஸ்), உமாமகேஸ்வரன் ஆகியோரின் மாமனாரும், தாரணி (யாழ் இந்துமகளிர் கல்லூரி), திருக்குமரன் (கொக்குவில் இந்துக்கல்லூரி), அக்சல் தமிழினி (பிரான்ஸ்), துஷ்யந்தி, மிதுலா ஆகியோரின் பேரனுமாவார். அன்னாரின் ஈமச்சடங்குகள் 8-1-89 ஞாயிற்றுக்கிழமை அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பி. ப. 1-00 மணிக்கு தகனக்கிரியைக்காக திருநெல்வேலி மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். உற்றார், உறவினர், நண்பர்கள், யாவரும் இத்தகவலை ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்: குடும்பத்தினர்.

(8634)

மரண அறிவித்தல்கள்

V.K. கந்தையா

(Retired Chief Inspector of Police, Founder-Ex-Administrator PoliceC W.C Benifit Scheme)

திரு. V.K. கந்தையா 4-1-89இல் காலமானார். அன்னார் திருமதி தெய்வானையின் அன்புக் கணவரும், காலஞ்சென்ற ரஞ்சன்(I P), திருமதி இந்திராதேவி செல்வஜெயசங்கர் (பண்டத்தரிப்பு மகளிர் கல்லூரி), மனோரஞ்சிதன் (அமெரிக்கா) ரஞ்சினிதேவி (யாழ்ப்பாணக் கல்லூரி) திருமதி உமா ஜோர்ஜ் (லங்கா சிமெந்து லிமிட்டட்) ஆகியோரின் அன்புத் தந்தையும், திருமதி சாந்தினி ரஞ்சன், செல்வ ஜெயசங்கர், ஜோர்ஜ்(சந்திரன்-லங்கா சீமெந்து லிமிட்டட்) ஆகியோரின் மாமனாரும், மகிழ்தினி, கிருபா ஆகியோரின் பேரனுமாவார். அன்னாரின் இறுதிச் சடங்குகள் 9.1.89 திங்கட்கிழமை காலை 8 30 மணிக்கு நடைபெற்றுப் பூதவுடல் தானக் கிரியைக்காக முற்பகல்11-30மணிக்கு அராலி தெற்கு பூளுவடை மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

தகவல்:
மனைவி, மக்கள்.

அன்பு இல்லம்.
அராலி தெற்கு. (8615)

வைரமுத்து தங்கம்

பொன்னாலையைச் சேர்ந்த வைரமுத்து தங்கம் 7 - 1 - 89 இல் காலமானார் இவர் காலஞ்சென்ற பொன்னாலை விஷவைத்தியர் சின்னப்பு அவர்களின் மகளும், காலஞ்சென்ற வைரமுத்து அவர்களின் அன்பு மனைவியும், கதிரேசு [சிங்கப்பூர்] நடராசா [சிங்கப்பூர்] காலஞ்சென்ற தியாகராசா [சிங்கப்பூர்], குலசேகரம்பிள்ளை. சங்கீத பூஷணம் உருத்திரன், ரோகினி அம்மா, தங்கச்சியம்மா ஆகியோரின் தாயாரும், சிவகுருநாதன், சிவஞானசுந்தரம், செல்வகேசம் [சிங்கப்பூர்], கின்னம்மா [சிங்கப்பூர்] பரமேஸ்வரி, சிவயோகம். பரமேஸ்வரி ஆகியோரின் மாமியாரும், வரதராஜா [மேலதிக மாவட்ட நீதிபதி யாழ்ப்பாணம்] ரங்கராஜா [திட்டமிடல் பணிப்பாளர் வவுனியா]. சௌந்தரராஜன் [பொறியியலாளர் யாரெயின்], பாக்கியலட்சுமி, விஜயலட்சுமி, ஜெயலட்சுமி, சசிதேவி [யாழ்போதனாவைத்தியசாலை], விஜயராணி [ஆசிரியை]. ஜெயராணி [மூளாய் கூட்டுறவு வைத்தியசாலை], கமலராணி [இராமநாதன் நுண்கலைக்கழகம்], மனோகரன், ஸ்ரீகாந்தன் ரஞ்சனி, அபிராமி, ஸ்ரீநிவாசன், கிருஷ்ணவேணி, சத்தியவேணி, சௌமியா, ஸ்ரீதரன், லதாங்கி, அனுஷா, தேவசேனா, சங்கீதா, ராஜாராமன், கிருத்திகா, செல்வராணி, செல்வக்குமார், செல்வமலர், செல்வராசா, சிங்கப்பூரில் இருக்கும் முரளீதரன், ஸ்ரீதரன், மகேந்திரன், யமுனா. கெங்காதரன், கெங்காதிலகம், லோகநாதன், சத்தியபாமா, பிரேமா, சிவா ஆகியோரின் பேத்தியும். ஜனனி, சஜானி, நளினி, மாலினி, அகிலன், அரவிந்தன், அனந்தன், அரங்கன், கிரிஷாந்தினி, அருணன், மதுசூதனன் [பாரெயின்] தர்சினி ஆகியோரின் பூட்டியும், காலஞ்சென்ற வேலாயுதம் [போகி] பொன்னம்பலம் [பென்சனர்] சிவகுரு [பென்ஷனர்] இராசையா, செல்லையா [விஷவைத்தியர்] செல்லம் [சிங்கப்பூர்] ஆகியோரின் சகோதரியும் ஆவார்.

மரணச்சடங்குகள் 8 - 1 - 89 ஞாயிற்றுக்கிழமை 12.00 மணிக்கு பொன்னாலை மயானத்தில் நடைபெறும் உற்றார் உறவினர் நண்பர்கள் இவ்வறிவித்தலை ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:-
குடும்பத்தினர்

பொன்னாலை
சுழிபுரம். (8631)

ஆறுமுகம் சேது நாராயணபிள்ளை

வல்வெட்டித்துறை, திருவிளைச் சேர்ந்த இளைப்பாறிய அரசாங்க பிரதம இலிகிதர் ஆறுமுகம் சேது நாராயணபிள்ளை சனிக்கிழமை (7-1-89) அன்று காலமாகிவிட்டார். இவர் தங்கமம்மாவின் மருமகனும், கோதண்டநாயகியின் கணவரும், சதிய சீலன் (R M P), சத்தியவாணி, காலஞ்சென்ற மனோகரன் (தபாலதிபர்), கலிங்கராஜன் (கனடா) மனோரஞ்சனி ஆகியோரின் அன்புத் தந்தையும், கிருஷ்ணசாமி, நிர்மலா, பத்மாவதி, பத்மினி ஆகியோரின் மாமனாரும் சாந்திமதி, இந்துமதி, நர்மதா, ஹேமமாலினி, சேதுமாதவன், பல்லவநம்பி, ஊர்மிளா, நித்தியா, பிரசன்னா, சனோமிய ஆகியோரின் பேரனுமாவார். 8-1-89 மு. ப 9 மணியளவில் 'மங்களகிரி' நீரூவில் இல்லத்தில் இருந்து அன்னாரின் பூதவுடல் ஈமக்கிரியைகளுக்காக ஊறணி மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்: சே. சத்தியசீலன்

திருவில்,
வல்வெட்டித்துறை. (8634)

சிக்மா பம்ப்ஸ்

மண்ணெண்ணையில் இயங்கும் விலியர்ஸ், குபோடா என்ஜின் பொருத்தப்பட்ட சிக்மா பம்ப்ஸ் இப்பொழுது கையிருப்பில் உண்டு. குறிப்பிட்ட தொகையே வந்திருப்பதனால் உங்கள் தேவைகளை உடனே பூர்த்தி செய்து கொள்ளுங்கள்.

விலியர்ஸ் என்ஜின் பொருத்தியது -7500. 00
குபோடா என்ஜின் பொருத்தியது -9300. 00

யுனைற்றெட் அக்றே என்ஜினியரிங்
274/1 ஆஸ்பத்திரி வீதி,
(பெரியாஸ்பத்திரி முன்பாக)
யாழ்ப்பாணம்.
தொழிற்சாலை:
நாவற்குழி-கைதடி. (C/1247)

பாலர் ஆசிரிய பயிற்சி வகுப்புக்கள்
St. Peter's Nursery—Kilner மண்டபம், K. K. S. Rd.
16-01-89 இல் மீண்டும் ஆரம்பம்
புதிய பாடத்திட்டத்துக்கமைய
இம்முறை ஆங்கிலம் ஒரு விசேஷ பாடம்
விண்ணப்பங்கள் 13-01-89 வரை
Kilner மண்டபத்தில் ஏற்கப்படும்
அடிப்படைத் தகைமை- G. C. E. O/L சித்தி
(C/1117) முகாமைக்குரு, 9, வேம்படி ரோட், யாழ்ப்பாணம்.

இப்பத்திரிகை நியூ உதயன் பப்பிளிக்கேஷன் (பிறைவேட்) லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் நாவலர் வீதி, 292/2 இலக்கத்தில் உள்ள அவர்களது அச்சகத்தில் (08 - 01 - 1989) அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Printed and Published by New Uthayan Publications (pvt) Ltd 292/2 Navalar Road, Jaffna on Sunday 08th January 1989

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org